328

328

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No

OFFICE OF THE REGISTR
16 NOV 1946
MADRAS

உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 27—10—46 வியஞல அற்பசிமீ 11வ ஞாயிறு | இதழ் 13

பெண்களும் பேய் பிசாசு நம்பிக்கையும்

(திருமதி R. அன்னபூரணி)

அன்பார்ந்த சகோதரிகாள்! நாம் நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாய் நிற்கும் கோடி கடவுள்கள் நம்பிக்கையை ஒழிக்கவேண்டும். இதுபோது மூட நம்பிக்கைகள் என்னும் தலைப்பில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் 'பேய் பிசாசு' நம்பிக்கைகளால் பெண் மக்களடைந்து வரும் இன்னல்கள் சிலவற்றை குறிப்பிடுகிறேன், தயவுடன் கூர்ந்து கவனியுங்கள்!

வியாதிகளுக்கு சிகிச்சையும் பேய் பிசாசு நம்பிக்கையும்

சாதாரணமாக வியாதி வருவது சுகாதார சீர்கேட்டால் என்பது இக்காலத்தில் பிரத்தியக்ஷானுபவம். இதற்கு உடல் நிலையை பரிசோதித்துச் சிகிச்சை செய்து குணப்படுத்த இலவச வைத்திய சாலைகளும் அநுபவ வைத்தியர்களும் அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டிருக்க வில்லையா? இருந்தும்கூட, ஒரு குடும்பத்தில் ஒருவர் உடல் நலிவுற்றால் அக்குடும்பத் தலைவியாயிருக்கும் பெண் மகள் என்ன செய்கின்றாள்? வியாதி எதனால் உண்டாயிற்று என்று அறிந்துகொள்ளும் திறன் தனக்கில்லாவிடினும், அவ்வாறாயச் சியிற் தேர்ச்சிபெற்ற வைத்தியரிடம் கொண்டு போவதில்லை. இது ஏதோ துஷ்ட தேவதைகளின் ('பேய் சாமிகள்') கோபமென்று!, பகைவர்களால் சூன்யத்தின் மூலம் நேர்ந்து விட்ட மோசம் என்றும், கடவுளர்களின் கட்டளை (?) என்றும் குருட்டு நம்பிக்கைகளை மேற்கொண்டு தெய்வ பிரார்த்தனை யென்றும், சாந்தி கழிப்பென்றும் அதற்கு எவ்வளவு செலவானாலும் செய்வார்கள். அஜீரணத்தாலோ, சீதளத்தாலோ நோயுற்றிருக்கும் ஒருவருக்கு 'படுத்தால் பாயும் பலகை' எல்லாம் தெய்வச்செயல்'(?) சாப்பிட்டால் நோய் தீரும் என்று மேலும் மேலும் திணிப்பார்கள். ஏற்கனவே பழுதடைந்து சக்தி குறைந்திருக்கும் ஜீரணக் கருவிக்கு மேலும் மேலும் வேலை கொடுப்பதால் அது ஓய்ந்துவிடுகிறது. (உயிர் நீங்கி விடுகிறது) அப்போது அது தெய்வத்தின் 'சித்தம்' என்றும் பகைவர்களால் சூன்யத்தின் மூலம் நேர்ந்துவிட்ட மோசம் என்றும் கூறிவிடுகின்றனர். அந்தோ! இவர்களே "அன்றெழுதினவன் அழித்தெழுதப் போவதில்லை", என்கிறார்கள். பின்பு எழுதினவன் தானே "இன்ன நாளில் இன்ன தேதியில் இவன் உயிரைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று எழுதியிருக்கவேண்டும். விஷயம் இப்படியிருக்க நோயுற்றவரைக் குணப்படுத்த மந்திரக் காரரையும் தந்திரக்காரரையும் அழைத்து வருவானேன்? பகைவர்கள் சூன்யம் செய்துவிட்டார்களென்று பதிப்பதேன்? ஒன்று இருந்தால் 'கடவுள்' எழுத்து என்பது பொய்யாகவேண்டும் இல்லையேல் பேய், பிசாசு, சூன்யம், என்பது பொய்யாகவேண்டும்; இன்னும் பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்போமாயின் இரண்டும் பொய்யென்பது எளிதிற் புலனாகும்.

இன்னும் தொத்து சம்பந்தமான நோய்களாலோ, கொடிய ரோகத்தாலோ, மனோ வியாதியாலோ சோர்வடைந்திருக்கும் பெண் மக்களை பேய் பிடித்துக் கொண்டிருக்கிறதென்று 'பூசாரிகள்' என்னும் (கிணற்றுத் தவளைகளைக் கொண்டு) பேயோட்டும்படிச் செய்வார்கள். இத்தகைய கொடுமைக்கு உதாரணமான, நான் நேரில் கண்ட சம்பவமொன்றைக் குறிப்பிடாமல் மேற்செல்ல என் மனம் இடந்தரவில்லை.

சில வருஷங்களுக்கு முன்பு எமது வீட்டையடுத்த தமிழ் வைத்தியர் ஒருவர் வீட்டில் அவரது குழந்தையொன்று இறந்து விட்டது. அதுபோது அவருடைய நண்பர் பலரும் வந்திருந்தனர். அவர்களுள் சுமார் 20-வயதுடைய கல்வியும் நாகரிகமும் உடைய ஒரு சகோதரியும் தமது மாமி, நாத்தி, தாயார் முதலியவர்களோடு வந்திருந்தார். அச்சகோதரி 'சுவாச காசம் வியாதியால்' (Asthma) என்னும் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார். அவ்வியாதியுள்ளவர்களுக்கு அடிக்கடி ஓர் வித மூச்சு (இழுப்பு) ஏற்படுவது அவ்வியாதியின் இயற்கை, அது போலவே அவர்களுக்கு அச்சமயம் அந்த இழுப்பு கடுமையாக வந்து விட்டது. அந்த ஆபத்தான சமயத்தில் அவரது உறவினர்கள் என்ன பரிகாரம் தேடினார்கள் தெரியுமா? ......கூறுகிறேன் கேளுங்கள்! "இது ஒரு விதமான காற்று சேஷ்டை, அது இவ்வமயம் வந்துவிட்டது, வேப்பிலைக் கொத்தும் கையுமாய் பூசாரியை அழைத்துக் கொண்டு வரவேண்டுமென்று" எழுந்து கொண்டார்கள். அந்தோ! பேதமையே!? இவர்கள் குறிப்பறிந்த அவ்வேழைச் சகோதரி என்னை நோக்கி 'தங்காய்! என்னை அடித்து சித்திரவதை செய்ய 'பூசாரி' என்னும் ராக்ஷஸனைக்கூட்டி வரப் போகிறார்களே! ஐயோ எனக்கு பேயுமில்லை, பிசாசுமில்லை. உனக்கு பரிகாரம் தேடுமுகத்தான் உபத்திரவம் செய்யாதீர்கள் என இரைஞ்சினாள். அப்போதும் அவர்கள் "இதெல்லாம் அந்தப் பேய் சொல்லும் தந்திரம் என்று கூறினார்கள்." இந்த விபரீதத்தைக்கண்ட யான் அச் சகோதரியை அழைத்து வந்து தந்தையாரிடம் யாம் கூறினேன். அவர் அவர்களுக்கு 'சுவாஸகாஸ நிவாரணி' என்னும் பொடியை புகைக்கும்படி செய்து சிறிது குணமானவுடன் உறவினர்களுக்கு வியாதியின் விபரத்தைக்கூறி தகுந்த அனுபவ வைத்தியரிடம் கொண்டு போகும்படி அறிவுறுத்தி யனுப்பினார். (அச் சகோதரி பின்பு இறந்து விட்டார்) ஒன்றாலும் அவர்களுக்கு சமய உதவி கிடைத்திராவிடில் அம் மூடாத்மாக்கள் அச் சகோதரியை என்ன வதை செய்திருப்பார்களென்று சற்றே சிந்தித்துப் பாருங்கள். இந்த இவர்களின் அறியாமையை, மேதமையை பைத்தியக்காரத்தனத்தை என்னென்றியம்புவது? எதற்கொப்பிடுவது?...

இதுபோலவே சிறு குழந்தைகளுக்கு சீதள சம்பந்தமான பலவித ரோகங்களால் ஓர் வித இழுப்பு வந்து திக்குமுக்கலாடும். இச்சந்தர்ப்பத்தில் தாய்மார் குழந்தையின் நெஞ்சில் கட்டி இறுகிப்போயிருக்கும் கபம் (சளியை) கரையும்படி பரிகாரம் தேடவேண்டும். ஆனால் பலர் அவ்விதம் செய்வதேயில்லை. 'காற்றுப்பேய்' வந்து விட்டது என்று யாரையாவது அழைத்து வந்து மந்திரம் போட்டுக்கொண்டிருப்பார்கள். குழந்தையோ கபம் கரைய வழியின்றி இறந்துபோய் விடும். அப்போது அதை காட்டேறி கொன்றுவிட்டது, பேய் அடித்து விட்டது என்று கூறுவதோடு கல் தெய்வத்திற்குப் பூசை தவறிவிட்டது என்று மற்றும் ஒரு ஆட்டையோ, சேவலையோ கொலை புரிந்து பூசையும் போடுவார்கள். இந்த பூசை போடும் ஆபாசத்தை எழுதவேண்டுமானால் இடம் போதாதாகையால் மற்றொரு சமயம் எழுதுகின்றேன்.

(இதன் தொடர்ச்சி 8-ம் பார்க்க)

சம்ப :— அதோ பாரும், மணம் வீசும் மலர்கள் நிறைந்த பூம் பொழில்! அங்குக் குலவிவிடும்மந்தமாருதமும், அந்தி வெயிலும், மனச்சோர்வகற்றும் மகத்தான இயற்கை மருந்துகள்.

மாற :— செயற்கையில் திளைப்பவனுக்கு இயற்கையில் நிம்மதி ஏற்படுவது இயல்புதான். ஆனால்...

சம்ப :— என்ன ?

மாற :— ஒன்றுமில்லை... ஒரு சிறு சந்தேகம்.

சம்ப :— என்ன சந்தேகம் ?...

மாற :— நமது ஆட்சியிலே மக்கள் அதிருப்தி கொண்டுள்ளதாக, அமைச்சர் அறிவித்திருக்கிறாரே, அது உண்மைதானா ? அதற்கு மாற்று மருந்தென்னவோ ?

சம்ப :— ஆட்சியில் அதிருப்தியா ? என்ன? சம்பந்தாண்டாரை ராஜகுருவாகக் கொண்ட மாறவன்மனின் ஆட்சியிலா அதிருப்தி (சிரித்து) கட்டுக்கதை ! நாடெங்கும் மகிழ்ச்சியும் இன்பமும் பொங்கிப் பெருகுவது எனக்கல்லவோ தெரியும்.

மாற :— உம்... நான் அப்பொழுதே நினைத்தேன், அதிருப்தி அமைச்சர் மூளையில்தான் என்று!

சம்ப :— அவனோடு இளநாகனையும் சேர்த்துக்கொள்ளலாம். இருவரும் நெருப்பும் காற்றும்போல் !

மாற :— (சந்தேகித்து) சுவாமி ?

சம்ப :— நான் சொல்வது நிச்சயம். மன்னவா ! இந்நாட்டு மக்களை முன்னேற்றவே தான் பிறந்திருப்பதாக அவன் பாவனை. சில வேளைகளிலே, நாம் இருப்பதைக்கூட இளநாகன் மறந்து விடுகிறான் !

மாற :— தங்களுக்கு ஏதேனும் அபசாரம் செய்தானா சுவாமி ?

சம்ப :— அவனா? எனக்கா? (சிரித்து) பழுக்கக் காய்ச்சின இரும்பினிடம் பாம்புக் குட்டிக்கு என்ன வேலை ? [illegible]வோ நெருங்கவேண்டும்?

மாற :— அதுதானே கேட்டேன், சுவாமி! நாளைக் காலை விழாவுக்கு எல்லா ஏற்பாடுகளும் தயாராகிவிட்டன அல்லவா ?

சம்ப :— வெகு நாட்களுக்கு முன்னரே தயாராய் விட்டன.

மாற :— கலை விழாவின் இசைப் போட்டியில் அமைச்சரைத் தலைமை வகிக்கச் சொல்லி விட்டேன், என் உடல் நலக்குறைவு காரணம், தாங்கள் உடனிருந்து சிறப்பாக நடத்துங்கள்.

சம்ப :— மன்னவா! கலை ஞானமில்லா மந்திரியா கலைப் போட்டியில் தலைமை வகிப்பது? பொருந்தாது. சிங்கமிருந்த இடத்தில் பூனை அமர்வதா? (சிரித்து) நகைப்பார்கள் நாட்டு மக்கள்.

மாற :— அப்படியென்றால்? ’

சம்ப :— மன்னனையன்றி, யார் அந்தப் பதவியை வகிக்கத் தகுதியுள்ளவர்கள் ?

மாற :— உங்கள் இஷ்டம் இதுவானால்...

சம்ப :— இது என்னிஷ்டமல்ல... இந்த நாட்டு மக்களின் கோரிக்கை, பாரம்பரியம் !

மாற :— சரி, நானே அதனைச் செய்கிறேன்.

சம்ப :— அதுதான் முறையானது, இல்லாவிட்டால் கலைப் போட்டியே கேலிக்கூத்தாகிவிடும்.

4

[சம்பந்தாண்டார் இல்லம்]

குமுத :— (மெதுவாகப் பாடுகிறாள்).

வாழ்வினில் உயர்ந்தவன் மனிதன்—காட்டில்
வளங்களைப் பெருக்குவோன் வீரன்.

சம்ப :— குமுதம் !...

குமுத :— அப்பா !...

சம்ப :— உம் . அந்தப் பாட்டிலே உன் மனம் அவ்வளவுக்கு ஈடுபட்டுவிட்டதா ?

குமுத :— எவ்வளவு அற்புதமான பாடல் !

சம்ப :— என்ன சொல்லுகிறாய் ?

குமுத :— அவர் இசைப்போட்டியில் பரிசு பெற்றது மிகப் பொருத்தம். நான் அவருடன் ஒப்பிடத் தகுதியுள்ளவளா ? ஏதோ பரிசு பெற்றுவிட்டேன். அவரது குரல் இனிமையும் பண்ணும் இசையும், கலை வளமும், அந்தப் பாட்டின் கருத்தும், ஆஹா !... என்ன ஆனந்தம் !

சம்ப :— (வெறுப்புடன்) ஏன்? அவனது தாமரை முகமும், தங்க மேனியும், அகன்ற மார்பும் உனக்கு ஆனந்தமளிக்க வில்லையோ ?

குமுத :— (அஞ்சி) அப்பா ?

சம்ப :— என் தோல்வியில் உனக்கு இவ்வளவு ஆனந்தமா குமுதம் ?

குமுத :— அப்பா ! நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

சம்ப :— “போர் வீரன் கலைஞனாக இருக்க முடியாது.” என்ற என் கட்சி, படுதோல்வியடைந்தது நேற்றைய கலை விழாவில்...

குமுத :— ஏன்? போர் வீரன் கலைஞனாக இருக்க முடியாதா?

சம்ப :— ஆ!...அந்தப் புண் ஆறு முன்பே மற்றொரு தோல்வியுமா என்னெதிரே நிற்கவேண்டும்? பல்லாண்டுகளாக உன்னைப் பாடுபட்டு வளர்த்ததன் பயனா இது?

குமுத :— அப்பா ! நான் ஒரு தவறும் செய்யவில்லையே.

சம்ப :— இதை விடப் பெரிய தவறு மற்றொன்று. மகளே ! மன்னன் உலவவேண்டிய உன் மனப் பூங்காவில் அந்த இளநாகன் உலவ இடமளித்தாய். மாணிக்கச் சுடர் மதிப்புப் பெறுவது மகேஸ்வரனின் மகுடத்திலிருந்துதான். குப்பை மேட்டிலிருந்தல்ல !

குமுத :— மன்னனை நான் எப்படி மணந்து கொள்ள முடியும்?

சம்ப :— முடியும்.

குமுத :— ஆனால் . என்...மனம்...?

சம்ப :— உன் மனதுக்கு, இங்கே இடமில்லை. என் ஆக்ஞை! என் விருப்பத்தை மறுப்பது குற்றம்!

குமுத :— நான் அந்த வீரன் மேல் காதல் கொண்டேனே, அது என் குற்றமா ?

சம்ப :— இயற்கையின் மீது குற்றம் சுமத்த விரும்புகிறாய். குமுதம்! எல்லாம் எனக்குத் தெரியும். உனக்கு நான் கற்பித்த கலையும் ஞானமும் எனக்கே எதிராக முடிவதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டேன். ஜாக்கிரதை ! என் மனம்போல் நீ நடக்க வேண்டும். இன்றே மறந்துவிடு இளநாகனை ! இல்லையேல் துன்பம் தொடர்ந்து வரும்.

குமுத :— அப்பா !...அப்பா !! .. (போகிறார்)

5

[இளநாகன் வீடு]

இளநாகன் :—இளவரசி ! தாங்கள் அதிகமாக என்னைப் புகழ்கிறீர்கள். பொருந்தாப் புகழ் !

பைங்கிளி :—இல்லை. இசையரங்கில் நீங்களடைந்த வெற்றிக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்களை, ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும், வீரர் மட்டுமல்ல நீங்கள், கலைஞரும் என்பதையறியக்களிப்படைகிறேன்.

இள :— தாங்கள் மட்டுமென்ன ?

பை :— தங்களைச் சந்திக்க வாய்ப்பளித்தீர்கள், ஆனால்... வீரரே! நம் சந்திப்பை நிரந்தரமாக்குவீர்களா ?

இள :— இளவரசி! என்னால் என்ன முடியும்? நான் ஓர் போர்வீரன்.

பற்றியது பகுத்தறிவுத் தீ

(அனுமந்தன் பட்டி பெ. நல்லசாமி)

1942-ம் வருடம் ஆகஸ்ட் கலவரம் அமளி படுகிறது. அப்போது நான் ஒரு மாணவன், திருச்சியில் 5ம் பாரத்தில் படித்துக் கொண்டிருக்கிறேன், தியாகத் தீயில் குதித்து விட்டதாக நினைத்து பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து பல பல கத்தினேன். பலன் 5 நாள் சிறை வாசம், பெருமை அடைந்தேன் பெரிய காரியத்தைச் சாதித்ததாக நினைத்து.

நான் ஒரு காங்கிரஸ் காரன், காந்தியின் பக்தன், காங்கிரசைக் குற்றம் சொல்பவர்களைக் கயவர்கள் என்று சொல்வதற்கு கொஞ்சமும் அஞ்சமாட்டேன், அதுவும் "சு. ம." என்றாலே ஓர் தனி வெறுப்பு, "சு. ம." மக்களை ஓர் அறிவில்லாத கூட்டம் என்றேன், தனித்தலைவர் பெரியாரை பெருமை பிடித்த, அகம்பாவம் கொண்ட பட்டம் பதவியைத் தேடித் திரியும் பித்தர் எனப் புகன்றேன். பெரியாரைத் திட்டியதால் நான் ஓர் பெரியோன் என எண்ணிப் பெருமித மடைந்தேன்.

1946-ம் வருடம், திருச்சியிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந்தேன், நான் மே மீ 12உ காலை மதுரை வந்து சேர்ந்தேன். என் கிராமத்திற்கும் மதுரைக்கும் இடையே 60 மைல் மோட்டாரில் போக வேண்டியிருந்தமையாலும் திருச்சியிலிருந்து பிரயாணம் பண்ணியது மிகவும் அலுப்பாயிருந்ததாலும், மதுரையில் தங்கிப் போகலாம் என நினைத்தேன். நானும் எனது தோழர்களும் ஓர் அறை வாடகைக்கெடுத்தோம். சுமார் காலை 9-மணி இருக்கும் "பெரியார் வாழ்க! அண்ணாத்துரை வாழ்க! ஆரியர் ஆதிக்கம் அழிக; திராவிட நாடு திராவிடருக்கே"

என்ற கோஷம் வானைப்பிளந்தது. மேல் மாடியில் அறையில் தங்கியிருந்த நாங்கள் வெளியே வந்து பார்த்தோம். கருப்புச் சட்டைப் படை அணி வகுத்து சென்று கொண்டிருந்தது. பெரியார் புரவித்தேரில் முன்னே செல்ல பெரும் படை பின்னே சென்றது. என் தோழர்களும் (காங்கிரஸ் வாதிகள்) சிறிது நேரம் பார்த்துவிட்டு தோழர்களில் ஒருவர் "வேடிக்கையாயில்லை" என்று என்னைப்பார்த்து கேட்டார். "யாரிய[illegible]ல்லாத காலிக் கூட்டம்" என்றேன் நான். அவரும் அப்படிச் சொல்லுங்கள் பிரதர் திராவிடநாடு திராவிடருக்காம்; திமிரைப்பார் திமிரை; நாட்டைத் துண்டாடும் நாசவேலைக்காரர்கள் என்றார். அவர் ஓர் ஆரியர். அனைவரும் சேர்ந்து பெரியார் மீது ஓர் வசை புராணம் பாடித் தீர்த்தோம். சற்று நேரத்தில் உத்தம பாளையம் தோழர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவருடன் கலந்த போது கருப்புச் சட்டைப்படை மகாநாட்டிற்கு அவர் வந்திருப்பதாக அறிந்தேன். "ஒரு வேளை அவருக்குப் பைத்தியமோ! இல்லையானால் வஞ்சகர்கள் வலையில் வீழ்ந்தாரோ" என்றெண்ணினேன். உங்களுக்கென்ன பைத்தியமா? என்றும் கேட்டுவிட்டேன் அவரும் ஓர் காங்கிரஸ் தோழர் என நினைத்து. அவர் ஒரு "சு. ம." என்பது அதுவரை எனக்குத் தெரியாது. கருப்புச்சட்டைப் படையை அவரிடமும் வைது தீர்த்தேன். "கேடர்கள்" என்றேன்; "கடவுளையும் கயவர்கள்" என்றேன். பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தார் தோழர் சையது முகம்மது.

பிறகு கொஞ்சம் நிதானமாக "நல்லசாமி! இன்று என்னுடன் வருவீர்களா மாட்டீர்களா" என்றார்.

"எங்கே" என்றேன் நான்.

"கருப்புச் சட்டைப்படை மகாநாட்டுக்கு" என்றார் அவர்.

"உமக்கென்னையா பைத்தியம் விட்டபாடில்லையா" என்றேன் நான்.

"நல்லசாமி, இன்று கூட்டத்திற்கு வந்து பாருங்கள் பிறகு வசை புராணம் பாடுங்கள்," என்றார்.

பிறகு பிடிவாதமாக அழைத்ததின் பயனாய் கருப்புச் சட்டைபடை மகாநாட்டிற்கு போனேன். பிரதிநிதிக் கட்டணம் ஒரு ரூபாயும் அவரே கட்டினார்.

வைகை மணற்பரப்பில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம் கருப்புச் சட்டைக் காவலர்கள் கூடியிருந்தனர்; கர்வத்துடன் கலந்து கொண்டேன் நானும்.

பெரும் மாறுதல்

தளபதி அண்ணாத்துரை அவர்களின் வீர முழக்கத்தைக் கேட்டேன், நெடுஞ்செழியன் அவர்களின் நேர்மையான சொற்பொழிவை இருசெவிக்கமுதென உண்டேன்; பெரியார் அவர்களின் பேச்சு என்னை விழுங்கியது என்றே சொல்ல வேண்டும் அதற்குமுன் நான் பெரியாரைப் பார்த்ததும் இல்லை, அவர்தம் சொற்பொழிவைக் கேட்டதும் இல்லை; அனைவரின் பேச்சும் என் நெஞ்சை அள்ளியது. **2-ம் நாள்** சென்றிருந்தேன் ஈப்புகுவதும் தெரியாமல் சொற்பொழிவைக் கேட்டு வியந்தேன். களங்கமற்ற ஆகாயத்தில் மேகக் கூட்டம் சேர்ந்தது; "பளீர்" என்று மின்னல்.

ஆம்...... இடையே இன்னல் வந்தது பகுத்தறிவின் பகைவர்கள் பல்லாயிரக் கணக்கில் சூழ்ந்தனர். கல்வீசினர் பெரியார் படை வீரர்கள் பெரியாரிடம் உத்தரவு கேட்டனர். புன்னகைபூத்தார் பெரியார்.

"பொறுமைக் கொள்மின்; வெற்றி நமதே" என்றார். என் வியப்பிற்கெல்லையில்லை. "எவ்வளவு பெருந்தன்மை! என்ன அமைதி!" நான் சிந்திக்கத் தொடங்கிவிட்டேன். என் சிந்தனை விளக்கைத் தூண்டிவிட்டவர் பெரியார்.

பந்தல் பற்றி எரிவதற்கு பத்து நிமிடத்திற்கு முன்பு வரை பந்தலிலேயே தான் இருந்தோம். பகுத்தறிவுப் பகைவர்களுள் ஒருவன் வீசியகல் என்முன் நின்ற ஓர் கருஞ்சட்டை வீரன் மண்டையை உடைத்தது. சுருண்டு விழுந்தான் பையன். சில தோழர்கள் சிகிச்சைக்காக தூக்கி அழைத்துசென்றனர். நகைப்புடன் நடந்தான் அவ்வீரன் ஆனால் நெற்றியில் குருதி வழிந்தோடியது.

நாங்களும் உயிருக்கு பயந்து ஓடினோம். மதுரை அல்லோலப்பட்டது; துப்பாக்கிப் பிரயோகம் ஆகும் வரையிலும் துஷ்டர்கள் கலையவில்லை.

பாவம்! அவர்களைச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? தூண்டி விடுபவர்கள் தூண்டி விட்டால் இவர்கள் என்ன செய்வார்கள்? பகுத்தறிவைக் குறையாடியவர்கள் பெரும்பாலும் பாமரர்கள் கல்வி அறிவு அதிகம் இல்லாதவர்கள், ஓரளவு கல்வி அறிவு பெற்றிருந்தும் நான் இருந்த நிலைமையை நினைக்கும்போது அவர்கள் செயலுக்கு ஆச்சரியப் படுவதற்கில்லை. என்னைபோல் அவர்களும் உணரும் ஒரு சந்தர்ப்பம் வந்தே தீரும்.

பின்னர் நானும் தோழர் சையதுவும் ஊர்வந்து சேர்ந்தோம், நடந்த நிகழ்ச்சிகளனைத்தையும் பற்றி வாதாடினோம் பகுத்தறிவுக்கு நான் அடிமையானேன்.

தோழர் சையது ஓர் மளிகை வியாபாரி. இயக்கப் புத்தகங்கள் ஏராளமாக வைத்திருந்தார். என் கிராமத்திற்கும் அவர் ஊருக்கும் ஒரு மைல் தூரம் தான், தினமும் சென்றேன், விவாதித்தேன் பல புத்தகங்கள் (பகுத்தறிவு சம்பந்தமான) கொடுத்தார். பெரியார் வரலாற்றைப் படித்தேன். பயன் பெற்றேன்.

என் கிராமத்தின் இழிவான நிலைமையை நினைத்துக் கலங்கினேன். என் தோழர்களனைவரும் என்னை வெறுக்க ஆரம்பித்தனர். காரணம் நான் ஓர் சுயமரியாதைக் கூட்டத்தைச் சேர்ந்தவனாம்; அப்படியானால் அவர்களுக்கு சுயமரியாதை இல்லை போலும்!! இனி என் உடல், பொருள், ஆவி, மூன்றையும் என் நலிந்த நாடாகிய திராவிட நாட்டின் நன்மைக்கே அர்ப்பணிப்பது என்று உறுதி செய்து கொண்டேன்.

தோழர் சையதுவின் தூண்டுதலால் "திராவிட நாடு, விடுதலை, உதயம், ஜனசக்தி" போன்ற பத்திரிகைகளுக்கு சந்தாதாரனாகிக் கொண்டேன். பகுத்தறிவு இயக்க சம்பந்தமான பல புத்தகங்களை என் சொந்தத்திற்கே விலை கொடுத்து வாங்கினேன். என்னை நிந்தித்துப் பேசிய எனது தோழர்களிடம் அப்புத்தகங்களை வலியக் கொடுத்து படித்து பார்க்கும்படி மன்றாடினேன்.

தோழர்கள் படித்தனர், தெளிவடைந்தனர் அறியாமைத்திரைகிழிந்தது. புராண ஆபாசங்களைப் படித்தனர் ஆரியமத வண்ட வாளங்களை அம்பலப் படுத்தத் தொடங்கி விட்டனர். அரசியலார் சூழ்ச்சியையும் விளக்கிப் பேசுகின்றனர் அனுமந்தன் பட்டியில் அறிவுப் புரட்சி ஆரம்பித்து விட்டது. பழமை விரும்பிகள் நிறைந்த ஊரில் பகுத்தறிவு தீ பற்றி எரியத் தொடங்கி விட்டது. இனி அதைத் தடுக்க முடியாது. பழமை விரும்பிகள் பதை பதைக்கின்றனர். பயன் என்ன?

பெரியார் ஈ. வே. ரா. பிறந்த தின விழா

பெரியாரின் 68-வது பிறந்ததின விழா மதுரையில் 26—9—46ல் கொண்டாடப்பட்டது. அதுபோது பண்டித முத்துச்சாமி அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் S. தவமணி ராசன், அய்யாச்சாமி இன்னும் பல தோழர்கள் பேசிய பின் மதுரை கருப்புச்சட்டைப் படை செயலாளர் ச. பழனிவேலு நன்றி கூற கூட்டம் இனிது முடிவடைந்தது.

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
கிரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முளைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்

உதயம்

மலர் 1 27—10—46 இதழ் 13

இடைக்கால சர்க்காரும், முஸ்லிம் லீகும்

நாட்டிலே பெரிய எரிமலையொன்று குமுறிக் கொண்டிருந்தது. எந்தச் சமயத்தில் அது வெடித்து வெளிக் கிளம்புமோ என்று மக்கள் அஞ்சியிருந்தனர். இப்பொழுது அக்குமுறல் ஒரு சிறிது அடங்கி விட்டது என்று எண்ணக் கூடிய நிலைமையில் நாமிருக்கிறோம். இவ்வாறு நாம் எண்ணுவதற்குக் காரணம், இந்தியாவின் இடைக்கால சர்க்காரில் முஸ்லிம்லீக்கும் சேர்ந்து கொள்ள சம்மதித்தது தான்.

முஸ்லிம்லீக் சேர்க்கப்படாமல் இடைக்கால சர்க்கார் நிறுவப்பட்டதினால், நாட்டில் எந்த சமயத்தில் எங்கு கலவரமும் குழப்பமும் ஏற்படுமோ, என்னென்ன விபத்துக்கள் தோன்றுமோ என்ற அச்சம் மக்கள் மனத்தை வாட்டிக் கொண்டிருந்தது என்பதை எவராலும் மறைக்க முடியாது. இந்த நிலவரத்தைத்தான் நாம் நாட்டில் குமுறிக் கொண்டிருந்த எரிமலை என்று கூறினோம். இப்பொழுது முஸ்லிம்லீக் இடைக்கால சர்க்காரில் சேர்ந்து கொள்ள இசைந்து விட்டதால் நாட்டிலிருந்து வந்த அச்சமும் கவலையும் ஓரளவுக்குக் குறைந்திருக்குமென்று கருதுகின்றோம்.

ஆனால், இவ்வச்சமும் கவலையும் அடியுடன் நீங்கிவிட்டதாக நம்புவதற்கில்லை. ஏனெனில், முஸ்லிம்லீக்குக்கும் காங்கிரசுக்கும் ஏதாவது சமரசப் பேச்சு நடந்து ஒரு முடிவு ஏற்பட்டு முஸ்லிம்லீக் சேர்ந்திருந்தால் நல்ல அறிகுறி என்று கருதலாம். உண்மையில் அவ்வாறு பேச்சு வார்த்தை நடக்கவில்லை. வைசிராய் அவர்கள் தமது சொந்தப் பொறுப்பில் ஜனாப் ஜின்னா அவர்களை அழைத்து சேர்த்திருக்கிறார். அதனால் தான் கூறுகிறோம், அச்சமும் கவலையும் அடியுடன் நீங்கவில்லை யென்று.

ஆனால், இதிலிருந்து சில உண்மைகள் விளங்கி விட்டன. அதாவது, இடைக்கால சர்க்கார் ஏற்பட்டுவிட்டது, எங்கள் தலைவர் பிரதமராகிவிட்டார்; ஆட்சி முழுவதும் எங்கள் கையிலிருக்கிறது; வைசிராய் எங்கள் பிரதமர் கையெழுத்துப் போடச் சொல் லுமிடத்தில் தான் கையெழுத்து போட வேண்டும்; இந்தியா மந்திரி தம் காரியாலயத்தை மூடிவிட நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்; என்று காங்கரஸ் தோழர்கள் தெரிந்தோ தெரியாமலோ விரும்பியோ விரும்பாமலோ சொல்லி வந்த பேச்சுக்கள் எல்லாம் வெத்து வேட்டுக்கள் வெங்காய வெடிகள் என்று நிரூபித்துவிட்டது, வைசிராயும் ஜனாப் ஜின்னாவும் சேர்ந்து செய்த முடிவு.

அதுமட்டுமல்ல, இன்றைய இடைக்கால சர்க்காருக்கும் இவர்களுக்கு முன் இருந்த வைசிராய் நிர்வாக சபைக்கும் அந்தஸ்தில் ஒரு வித்தியாசமுமில்லையென்பதும் விளக்கப் பட்டுவிட்டது. மந்திரி சபையாக இருக்குமேயானால், கூட்டு மந்திரிகளைப் பொருக்கி எடுப்பதும், மந்திரி சபையில் சேர்ப்பது பற்றி பேச்சு வார்த்தை நடத்துவதும் பிரதம மந்திரியின் வேலையாக யிருக்கும். எப்பொழுது இந்த வேலைகளையெல்லாம் வைசிராயே செய்ய நேரிட்டதோ, அதற்குப் பிறகும் இதை (பண்டித நேரு சபையை) மந்திரி சபை என்று அழைப்பது வெறும் கேலிக்கூத்தேயாகும். முன்னையவிட அதிக அதிகாரங்களுடன் கூடிய வைசிராய் நிர்வாக சபையென்று கொள்ளலாமே யல்லாது, மந்திரி சபை என்று யாரும் கருதக்கூடாது. இதுவரை காங்கரஸ் ஏடுகளும் காங்கரஸ் தலைவர்களும் எவ்வளவு பெரிய பொய்யை மக்கள் நம்பும்படிச் செய்து வந்திருக்கிறார்கள் என்பதை பொதுமக்கள் உணர வேண்டும்.

மற்றும், காங்கரஸ்காரர்களே இடைக்கால சர்க்காரில் பதவி வகித்து வருவதால், அவர்களைத் தட்டிக் கேட்க யாரும் இல்லாததால், தான் தோன்றித் தனமாக நடந்துகொண்டால் என்ன செய்வது என்று மக்கள் அஞ்சினர். அந்த அச்சமும் கொள்ள இனி இடமில்லை யென்றே கருதுகின்றோம். எதிரிகள் சர்க்கார் நிர்வாகத்தில் இடம் பெற்று இருந்தால், எவருக்கும் சற்று தயக்கம் ஏற்படுவது சகஜம். இதனால், காங்கரஸ் சர்வாதிகாரத் தனமாக நடந்து கொள்ள முடியாது. ஆக, இந்த அச்சமும் கொள்ள இடமில்லை.

மற்றுமொரு குறையும் ஓரளவு தீர்ந்துவிட்டது; குமுறலும் சற்று அடங்கி விட்டது என்றே சொல்லலாம். அதாவது, 6 கோடி தாழ்த்தப்பட்ட மக்களில் 90 சத விகிதம் ஷெடியூல்டு வகுப்புக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தங்களை பிரிட்டிஷ் மந்திரிகள் தூது கோஷ்டி புறக்கணித்துவிட்டது என்றும், காங்கரசும் உதாசீனப்படுத்தி விட்டதென்றும், இடைக்கால சர்க்காரில் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கவில்லை யென்றும் கிளர்ச்சி செய்து வந்தனர். பம்பாய், கான்பூர், நாகபுரி முதலிய இடங்களில் சத்தியாகிரகம் செய்து ஆயிரக் கணக்கில் கைது செய்யப்பட்டும் தண்டிக்கப்பட்டும் வந்தனர். இப்பொழுது அந் நிலைமை மாறி விட்டதென்றே சொல்லலாம்.

முஸ்லிம் லீக்குக்குள்ள 5 ஸ்தானங்களிலே ஒன்றை ஷெடியூல்டு வகுப்புக்குக் கொடுத்திருக்கிறது. இதனால், நாட்டிலிருந்து வந்த அதிருப்தி குறையலாம் என்று நம்பலாமன்றோ? எனவே, எந்த விதத்தில் பார்த்தாலும், இடைக்கால சர்க்காரில் லீக் சேர்ந்து கொள்வதென்று முடிவு செய்ததும் தனக்குள்ள ஸ்தானங்களிலே ஷெடியூல்டு வகுப்புக்கு ஒரு ஸ்தானம் கொடுத்ததுமான காரியம் வரவேற்கக் கூடியதும் பாராட்டக் கூடியதுமாகும். என்றாலும், லீக், இடைக்கால சர்க்காரில் சேர்ந்து விட்டதினால் பெரும் மாறுதல் ஏற்பட்டுவிடாது. ஏனெனில், இப்புதிய இடைக்கால சர்க்கார் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமானால்,

லீக்குக்கும் காங்கரசுக்கும் மன மாற்றமேற்பட வேண்டும்; முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் பரஸ்பர நல்லுறவு ஏற்பட வேண்டும். இன்றுள்ள நிலையில் இவ்வாறு ஏற்பட்டிருப்பதாகக் கருத சிறிதும் இடமில்லை. நாட்டிலே, நடக்கும் சம்பவங்கள் பிரச்சாரங்கள் இவர்களுக்குள் மாச்சரியத்தை வெறுப்பை—பகைமையை வளர்ப்பதாகவே யிருக்கிறது.

நாட்டிலே, அதுவும் வங்காளத்திலும், பம்பாயிலும் நடக்கும் கலவரங்களைப் பார்த்தால், மனமாற்றமோ நல்லுறவோ ஏற்பட்டிருப்பதாக கடுகளவாவது நினைக்க இடமில்லை.

நாட்டின் விடுதலையில், மக்களின் நலத்தில் அக்கறை யுடையவர்கள் மக்களை மக்களாக மதிக்கிறவர்கள் இத்தகைய நிலைமையை நீடிக்கவிடக் கூடாது. எந்த விதத்திலும் தடுத்து நிறுத்த வேண்டும். இந்தச் சமயத்தில் எந்த ஒரு சமூகத்தையும் தூண்டக்கூடிய விதத்திலோ ஆத்திர மூட்டும் விதத்திலோ எதுவும் நடக்க அனுமதிக்கக் கூடாது. நமக்குள் விட்டுக்கொடுத்து நல்லுறவு ஏற்படுத்தாதிருந்து விட்டால், வெள்ளைக்காரனுக்கு இடமளித்தவராவோம். எனவே, இடைக்கால சர்க்காரில் பதவி வகிக்கும் இருக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒரு மாநாட்டைக் கூட்டி, இந்து—முஸ்லிம் மக்கள் யாவரும் இதன் விளைவை யுணரும் படிச் செய்து நாட்டில் இத்தகை அநாகரிகக் காரியங்கள் நடக்காமல் தடுக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறோம். துவேஷத்தை வளர்க்காமல் பரஸ்பர நல்லுணர்ச்சி ஏற்படபாடுவதுதான் இன்றைய ஒவ்வொருவருடைய மூச்சாக இருக்க வேண்டும். இதை விடுத்து தவறாக நடந்து கொள்பவர் எவரானாலும் எவ்வளவு பெரியவரானாலும் அவர் நாட்டுக்கு பெரும் துரோகி யென்றே கருத வேண்டும். அதுமட்டுமல்ல, மக்களிடையே இத்தகைய மாச்சரியத்தையுண்டு பண்ணி வந்தால் இதற்குத் துணையாக மதங்கள் இருந்தால், இவைகள் இருக்கவேண்டுமா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

நூல் விநியோகம்

பாழாய்ப்போன யுத்தம் வந்ததும் போதும், மக்கள் படுகிற பாடும் போதும். எது எடுத்தாலும் 'இல்லை' 'இல்லை' என்ற சொல்லைத் தவிர வேறு எதுவும் பதில் கிடைப்பதில்லை. போதாக்குறைக்கு அனுபவமோ, பொதுநல நோக்கோ, பொது மக்களின் கோரிக்கைக்கு இணங்கிப்போக வேண்டு மென்ற எண்ணமோ இல்லாத அதிகார வர்க்கத்தின் போக்கினால் ஒரு பக்கம் மக்கள் சொல்ல முடியாத துன்பங்களுக்குள்ளாக வேண்டியிருக்கிறது. அதிகார வர்க்கத்தைக் குறை சொல்வதில் பயனில்லை யென்றாலும், குறை சொல்லாமல் இருப்பதற்குமில்லை. இவர்கள் இதுவரை பொது மக்களைப் பற்றிக் கவலையில்லாமல் தங்கள் மனம் போல் நடந்து கொள்ளப் பழக்கப்பட்டிருக்கிறார்கள், அதனால் திடீரென்று மனமாற்றத்தை எதிர்பார்க்க முடியாதென்றாலும் இன்றுள்ள நிலையில், பொது மக்களின் தொடர்பில்லாமல் அவர்கள் நடந்து கொள்வதினால் ஏற்படும் விளைவு பொல்லாததாகயிருப்பதால், அவர்களைப்பற்றிக் குறை சொல்லித் தீரவேண்டிய அவசியத்திலிருக்கிறோம்.

யுத்தம் தோன்றுவதற்கு முன் அதிகார வர்க்கம் நிர்வாகத்தைப் பொறுத்தக் காரியங்களை மட்டும் கவனித்து வந்தது. ஆனால் யுத்தத்திற்குப் பின், மக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டம் பற்றிய காரியங்களிலும் தலையிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அதாவது, வர்த்தகத் துறையிலும் கைத்தொழில் துறையிலும் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. இவ்விரு துறைகளிலும் போதுமான அனுபவம் அவர்களுக்கில்லாததால், இது சம்பந்தமான உத்தரவுகள் பிறப்பிப்பதிலும் எவ்வளவு மாற்றங்கள் ஏற்படுத்தவும், அதனால் மக்கள் பல கஷ்டங்களுக்குள்ளாகவும் வேண்டிய நிலைமை ஏற்பட்டு வருகிறதென்பதை பொது மக்கள் அறியாமலிருக்க முடியாது. உதாரணமாக அரிசி விநியோகத்தில் மக்கள்படும் கஷ்டங்களுக்கு போதுமான அனுபவமும் பொது மக்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்கலாம் என்ற தன்மையுமில்லாததாகும்.

இவ்வளவுக்கு இப்பொழுது குறைந்து வருகிற தென்றால், பொது மக்களின் யோசனையைக் கேட்கும் காது தோன்றி யிருப்பதே யாகும் அது போலவே, துணி விநியோகத்திலும், நூல் விநியோகத்திலும் இருந்து வருகிறது. இவை விஷயத்திலும், அதிகார வர்க்கம் சற்று தாராள புத்தியுடன் பொது மக்களின் யோசனையைக் கேட்டு நடக்குமேயானால் மக்கள் கஷ்டம் ஓரளவு குறையும் என்றே கருதுகின்றோம்.

நூல் விநியோகத்தில் எவ்வளவு தூரம் குறைபாடுகளிருக்கின்றன என்பது சமீபத்தில் கரூரில் நடந்த சம்பவம் ஒன்றே விளக்கும். சில பகுதிகளில் அதிகார வர்க்கம் பொது மக்களின் யோசனையைக் கேட்டு நடப்பதினால் அத்தகைய தொல்லைகளும் கள்ள மார்க்கட்டும் இல்லாதிருந்து வருகிறது என்று கூறலாம். செய்யாறைப் பொறுத்தமட்டில் நூல் விநியோகம் திருப்திகரமாக நடந்து வருகிற தென்றே தோன்றுகிறது. செய்யாறிலுள்ள நூல் வர்த்தக சங்கக் காரியதரிசி தோழர் வெங்கடாத்திரி அவர்களின் முயற்சியினால், ஒவ்வொரு வியாபாரியும் சரிசமமான விகிதத்தில் நூல் விநியோகம் செய்து வருவதினால், கள்ள மார்க்கட்டோ தகராறோ இல்லாமல் ஒழுங்கான முறையில் நடந்து வருகிறது. ஆனால், இம்முறையைமாற்றி யமைத்து வேறு முறை புகுத்தப் போவதாகத் தெரிகிறது. ஏனெனில் செய்யாறிலுள்ள நூல் வர்த்தக சங்கத்தார் இப்பொழுதுள்ள முறைப்படியே நூல் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள் என்பதினால், ஏதோ மாறுதல் ஏற்படப் போகிறது என்பது புலப்படுகிறது. அதனால், அதிகார வர்க்கம் கூடுமானவரை பொது மக்களின் கோரிக்கைக்கு செவி கொடுத்து, அதன்படி நடந்துகொண்டால் ஓரளவுக்காவது மக்களின் கஷ்டத்தைக் குறைத்தவராவார்கள். ஆகவே, நூல் விநியோக சம்பந்தமாக ஏதாவது மாற்றம் செய்வதாயிருந்தால் நிரயோசித்து பொது மக்களின் சங்கங்களையும் பிரதிநிதிகளையும் கலந்து செய்தால் வீண் குழப்பத்தையும் கஷ்டத்தையும் தடுத்தவராவார்கள் என்று தெரிவித்தொள்ள ஆசைப்படுகிறோம்.

சிந்தித்துப்பாருங்கள்

அண்மையில் நடந்த உலகப்போர், அந்தந்த நாட்டின் கலை, மொழி, நாகரீகம், சுதந்திரம் முதலியவைகளைக் காப்பதற்காக நடந்ததாகச் சொல்லப்பட்டது. நாஜிசமும் பாசிசமும், இவைகளுக்கெல்லாம் அபாயத்தை விளைவித்து வந்ததால், அவைகளை எதிர்த்துப் போராடவேண்டியதாயிற்று. அதில் வெற்றியும் கண்டனர். இதனால், இனி அந்தந்த நாட்டு மொழி, கலை, நாகரிகம் சுதந்திரம் முதலியவைகள் காக்கப்படும் என்று மக்கள் கருதநேரிட்டது. ஆனால், இன்று இந்நாட்டில் நடைபெறும் காரியங்களைப் பார்த்தால், அவ்வாறு கருதுவதற்கில்லை.

உதாரணமாக, சென்னை மாகாண மந்திரிகள் போக்கு நமக்கு பெருங்கவலையை யளிக்கக்கூடியதாகவே யிருக்கிறது. மொழியைப் பொறுத்தமட்டில், தமிழ் மொழி முன்னேற்றத்திற்கு ஆக்கமளிப்பதாக நடிக்கிறார்கள். ஆனால் இந்தி மொழிக்கு ஊக்கம் அளித்து வருகிறார்கள். ஒவ்வொரு உயர்தரப் பள்ளியிலும் இந்தியை கற்பிப்பதற்கான கட்டாய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். என்று உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர் ஆனால், மாணவர்கள் இஷ்டப்பட்டால் கற்றுக்கொள்ளலாமென்று கூறுகிறார்கள். இருந்தபோதிலும், அவர்கள் நோக்கம் தமிழ்மொழி வளர்ச்சிக்கு பெரும்கேட்டை விளைவிப்பதாகவே ஆகும். தமிழ் மக்கள் இவ்வளவு தூரம் இன்று விழிப்படைந்திருக்கிறார்கள் என்றால், தமிழ் மொழியில் மக்களுக்கிருக்கிற ஆர்வம்தான் காரணம். இந்த ஆர்வத்தை அழிப்பதா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

தோழர் கண்ணன்

ஜலகண்டபுரம் J. P. கிருஷ்ணன் என்கிற தோழர் ப. கண்ணன் அவர்களை தமிழ் நாட்டார் அறியாமலிருக்க மாட்டார்கள். அவர் கடந்த பலவாண்டுகளாக சீர்திருத்தக் கருத்துக்களை-பகுத்தறிவுக் கருத்துக்களை கற்பனைக் கதைகள் மூலமாகத் தீட்டி வந்திருப்பதையும் நாடகங்கள் மூலமாகவெளிப்படுத்தி வருவதையும் அறியாமலிருக்க முடியாது. அதுமட்டுமல்ல ரேடியோ நிலையத்திலிருந்தும் நம் கொள்கையைப் பரப்பி வருகிறார். சமீபத்தில் திருச்சி ரேடியோ நிலையத்தில் நடைபெற்ற வீரன் என்ற சிறு நாடகமும் இவரால் எழுதப்பட்டதே. அது நம் வாசகர்களுக்கு நல்லவிருந்தாகயிருக்குமென்று சென்ற வாரத்திலிருந்து வெளியிட்டு வருகிறோம். இவ்வாரமும் 2-ம் பக்கத்திலும் 7-ம் பக்கத்திலும் வெளிவருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்.

ஒத்திவைப்பு

சென்னையில் 5—11—46ல் நடைபெற விருக்கும் சென்னை மாகாண செசவு பாதுகாப்பு மாநாடு ஒத்திவைக்கப் பட்டிருக்கிற தென்றும், தேதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப் படுகிறது.

காஞ்சனா!

(இளங்கோன், சென்னை)

காஞ்சனா! காட்டுக்கொடியாக நீ பிறந்திருக்கக் கூடாதா? கருத்திற்கேற்ற மரத்தைத் தழுவி இருக்கலாம். பட்டுப்போகும் மரத்தைத்தான் சுற்றி நிற்க வேண்டும் என்ற கட்டளை இல்லை யங்கே. சுற்றி நின்ற மரம் செத்துவிட்டதென்றால், மற்றொரு மரத்தைச் சுற்றக்கூடாதென்று சொல்லும் சுற்றத்தார் இல்லையடி அதற்கு. உன் வாழ்க்கைக் கப்பல், சுக்கான் முறிந்து சமூகச் சுழலில் சிக்கி சுழலுகிறது. தடுப்புமின்றி தத்தளிக்கிறாய் பயன் என்ன? நடுக்கடல் நாவாய் நாதனையிழந்து, ஐயகோ வென்றலறிடும் நிலையில் நான் நாதனாய் நின்று சுக்கானின்று சுழலும் கப்பலைச் சுழலினின்றும் கரை சேர்க்கிறேன் என்றால் சிந்தித்துப் பதில் கூறுகிறேன் என்கிறாய். சிந்தித்தது போதாதா? சிந்திக்கும் நேரமா இது? சாகும் வரையில் சிந்தனையிலேயே இருந்தால் கரை ஏறுவதெப்போது?

நீங்களும் இச்சுழலில் சிக்குண்டு வேதனைப்பட வேண்டுமா? சீ! சீ!! பெண்களின் பேதமையால் பேசுகிறாய் காஞ்சனா! சிந்தித்துப்பார் சிலந்திக் கூட்டிலே சிங்கத்தை அடைக்க முடியுமா? சமூகச் சுழலைக்கண்டு சீர்திருத்தவாதி பயப்படுவானா? சுகமின்றி சிறையில் மடிவதினும் சுகத்தோடு, சுடுகாட்டில் வாழலாம். 'ஊம்' என்று ஒரு வார்த்தைசொல். உன் சிறைக் [illegible] உன் சுகமும் துக்கமும் அந்தச் சொல்லில் தான் இருக்கிறது.

ஆனால் தலைமுறை தலைமுறையாக இருந்து வரும் வழக்கம்......அது தவிடு பொடியாகட்டும்.

பழைய வழக்கம் பாழ்பட்டுப்போகாதா?

பழமை, பழமை என்று உன் பகுத்தறிவைப் பாழ்படுத்திக் கொள்கிறாயே! எது பழமை! அழகான தாஜ்மஹால். அக்கால சிற்பியின் அற்புதக் கைத்திறன். அதைச் சீர் செய்து அழியாது காப்பாற்று. உலக உன்னதங்களிலே ஒன்றெனக் காட்டு: பழமையிலே பெருமைகொள். அதே நேரத்தில் அதற்குப் பக்கத்திலேயே அக்கால குடிசை யொன்றிருந்து, அதையும் அப்படியே வைத்திருப்பாயானால், உன் பழமைக்குப் பெருமையா? சிறுமையா? யோசித்துப்பார் காஞ்சனா! பழமையிலே பெருமை கண்டால், அதைப் பற்றிப், புகழ்ந்து, அப்புகழ்ச்சிக் கடலிலே மூழ்கி எழுந்திரு. பழமையிலே இழிவு கண்டால் அப்பழமைக் கோட்டையைப் பொடிசூர்ணமாக்கிவிடு. பயப்படாதே

உலகம் ஒப்புமா?

பருவத்தால் பூத்த பூ பலனடையாது பாழ்படுகிறதென்றால் உலகத்தைக் காட்டி வேதாந்தம் பேசுகிறாயே! உண்மைக்கு நியாயம் உலகத்திலுண்டா? கொடுமைகளை வளர்க்கும் கோழைகள் உலகமல்லவா இது? பாம்பிற்குப் பல்லில் விஷமிருப்பதறிந்தும், அதற்குப் பால் வார்த்துப் பூஜை செய்யும் பயங்கொள்ளிகள் வாழ் உலகம் இது. இந்த உபயோகமற்ற உலகிற்குப் பயந்து உன் உணர்ச்சியை பலியிடப் போகிறாயா? நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா?

கேட்டுக்கொண்டுதானே இருக்கிறேன்.

காஞ்சனா, இப்படி என் அருகில்வா. ஆஹா! உன் ரோஜா இதழ் உதட்டிலோர் மோகனப் புன்னகை இருந்தால், உன் முத்துப் பற்கள் எல்லாம் எத்தனை அழகு பெறும்! வாசனையைத் தூதனுப்பி வண்டுகளை வரவழைக்கும் மலரினங்களைப்பார். நீல வெளி நடுவில் நின்றிருக்கும் முழு நிலவில் உன் முகவொளி தோன்றித்தான் என்ன கைம்மைக் கருமேகம் திரையிட்டு மறைக்குதடி. ஐயோ! சில்லென்ற தென்றல் என் சிந்தனையைச் சிதைக்கிறதே! "எனக்கொன்றுமே தோன்றவில்லை"

ஆம்! என் நிலையும் அந்நிலைதான். மதுவுண்ட வண்டுவின் மதியிழந்த நிலையிலே எதையோ நினைத்து, ஏதேதோ பிதற்றுகிறேன். எதோ, உன் முகத்தைக் காட்டு, காஞ்சனா! உன் நெற்றியிலோர் பொட்டு, நீண்ட குழலிலோர் மலர். இவ்விரண்டும் நம்மை நித்தியானந்தத்தில் மூழ்கவைக்கும்

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

நான் ஒன்றுமே சொல்லவில்லை காஞ்சனா! எதைச் சொல்ல எனக்குத் தெரியும். உன் கைம்மைத் திரையைக் கிழித்தெறிய என் கைகள் துடிக்கின்றன என்று தான் சொல்லுகிறேன்.

இந்து முஸ்லீம் சமரச கூட்டம்

சென்காசி 15—9—46 மாலை 8-30 மணிக்கு இந்து முஸ்லீம் சமரச கூட்டம் அசைப்பு மண்டபம் முன் நடைபெற்றது. கூட்டத் தலைவர், மு. ஈ. அப்துல் ரஹ்மான் சாகிப் தலைமை தாங்கினர். பல இந்து முஸ்லீம் தோழர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

கோவை முரசு

வாரப் பதிப்பு

புரட்சிகரமான போக்கில் புதியதொரு மாறுதலும், செங்குந்த சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியர்கள் இன்னல்களைப் போக்கும், மாதர் முன்னேற்றத்திற்கும், தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கும் அதிக கவனம் செலுத்தும், அறிஞர் பலரின் கட்டுரைகளால் அலங்கரிக்கப்பட்டு ஆப்டோன் பிளாக்குகளுடன் வெளிவருகிறது.

ஆண்டு சந்தா ரூ 5—0—0

தனிப்பிரதி விலை அணா 2

ஆசிரியை,

S. P. மீனாட்சியம்மாள்,

கோவை முரசு ஆபீஸ்;

சூலூர், P. O.,

கோவை ஜில்லா.

உதயம்

சந்தா விபரம்:

உள்நாடு:-

வருடச்சந்தா ரூ	5—0—0
6 மாதச்சந்தா ரூ	2—8—0
தனிப்பிரதி ரூ	0—1—3

வெளிநாடு:-

வருடச்சந்தா ரூ	7—0—0
6 மாதச்சந்தா ரூ	4—0—0

மானேஜர்,

"உதயம்"

திருவத்திபுரம். N.A.

தேவை! தேவை!!

எங்கும் புகழ்பெற்ற

N. K. P. வேல் டைரக்ஷன் ஆயில் அண்டு சோப்

விற்பனை செய்ய

ஏஜண்டுகள் தேவை!!!

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது. இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப் படுத்தலாம். ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள் **தீர்க்கலாம்**

சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலிஷாகவும் இருக்கும். எவ்வித பரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது. விபரத்திற்கு எழுதவும்.

இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள்

விலாசம்:—

செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,

திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:— வேல்.

பை :— ஆம். அதனுல்தான் கேட்கிறேன். கோழைகளிடம் எனக்கென்ன கோரிக்கை? நாட்டைக் காக்கும் வீரர்க்கு ஒரு பெண்ணைக் காப்பது பிரமாதமா?

இள :— தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

பை :— யானையிடமிருந்து காப்பாற்றி, சிங்கத்தினிடமல்லவா விட்டு விட்டீர்கள்? நியாயமா இது?

இள :— என் மனமறிந்து அவ்வளவு பெரிய தவறு செய்ததேயில்லை.

பை :— அறியாமற் செய்த பிழையென்றால் மட்டும் மன்னிக்க முடியுமா?

இள :— எனக்கு ஒன்றும் விளங்கவேயில்லையே!

பை :— என்னை விபத்தினின்றும் காப்பாற்றினீர்கள். அதே நேரத்தில் காதல் எனும் சுடுநெருப்பில் தள்ளி விட்டீர்கள்!

இள :— என்ன?

பை :— அன்புக்கடலில் குளிக்க அநுமதிக்க. மாட்டீர்களா? என்னை உங்களுடையவளாக்க அந்த பாக்யம். பேரின்பம்!......

இள :— தேவி! மன்னிக்க வேண்டும். என் சிந்தனையைச் சிதற வைக்க வேண்டாம். பாலைச் சிரிப்பில் நெஞ்சைப் பதற வைக்கவும் வேண்டாம்.

பை :— நங்கையின் காதலில் மனம் பதறுமா? அவசியமில்லையே!

இள :— எனக்கும் காதலுக்கும் வெகு தூரம் வீண் முயற்சி.

பை :— என் வாழ்வில் சுகமே வீண் முயற்சியா?

இள :— "மன்னன் மகள் ஓர் போர் வீரனுக்காகத் தன்னிலை மறந்தாள்" என்ற அபவாதத்திற்கு தயவு செய்து ஆளாக வேண்டாம்.

பை :— (வெறுப்போடு) மன்னன் மகள்! மனதுக்கேற்ற மணவாளனின் அன்பைப் பெற முடியாத இந்த அபலை-மன்னன் மகள்! நாய்க்குப்பேர் முத்துமாலை!

இள :— தேவி சற்று ஆலோசியுங்கள். தங்களிடம் என்னை உரிமை யாக்குவது பாபமானது!

பை :— அப்படி யென்றால்.........?

இள :— தேவி!... என்னை மன்னியுங்கள். நான் வாழ்க்கையில் காதலை அறியாதவன், அறிந்து கொள்ளவும் விருப்பமில்லாதவன்.

(அவன் மனக் கலக்கம்
குமுதவல்லியும் வருகிறாள்.)

குமுத :— கலைஞரே! வணக்கம்.

இள :— ஓ! குமுதவல்லியா, வாருங்கள்... இப்படி அமருங்கள்............

குமுத :— தங்களைப் பார்க்க வேண்டும் என்ற அவாவால், அழையா வீட்டில் நுழையா விருந்தாளியாக வந்தேன் தவறாயின் மன்னிக்க் வேண்டும்.

இள :— என் இல்லம் எப்பொழுதும் வரவேற்கக் காத்திருக்கிறது.

குமுத :— ம்............இ

இள :— தாங்கள் என்ன காரியமாக வந்தீர்களென்று தெரிந்தால்.........

குமுத :— அன்று கலை விழாவின் இசைப்போட்டியிலே தங்களோடு நானும் வெற்றியடைந்தது எனக்குப் பேரானந்தமளிக்கிறது.

இள :— தாங்கள் உண்மையிலே உயர்வாகப் பாடினீர்கள்.

குமுத :— தாங்கள் மாத்திரம்?

இள :— ம்......ஏதோ, தெரிந்த வரைக்கும்......

குமுத :— ஒரு போர்வீரர் இசையிலும் இவ்வளவு தேர்ச்சியடைந்திருப்பது ஆச்சரியமில்லை?

இள :— எனக்குத் தெரியாததைச் சொல்லுகிறீர்கள்!

குமுத :— இளநாகரே! நம் இருவரது பெயரும் சம நிலையில் இருந்து வந்ததிலேயே, ஓர் இன்பத்தைக் கண்டேன்! அந்த இணைப்பு நம் வாழ்க்கையிலும் இருந்து விட்டால்ஆகா!...... எவ்வளவு பொருத்தம்!

இள :— பெண்ணே! இது என்ன பிரமை? மன்னர் பெருமானின் ஞானசிரியர் சம்பந்தாண்டாரின் மகளா இப்படிப் பேசுவது?

குமுத :— சம்பந்தாண்டாரின் மகள் என்றால், காதலை நெஞ்சிலேயே சுருக்கிவிட முடியுமா? அன்பரே! தங்களைப் பற்றியறிந்த பொழுதே என் இருதயம் தங்கள் பால் துள்ளிப் பாய்ந்தது. பார்த்த பிறகு......!

இள :— பெண்ணே! நான் போர் வீரன்! பகைவரோடு மட்டுமல்ல, வாழ்க்கையின் இச்சைகளுடனும் போர் புரிபவன்.

குமுத :— அதற்காக என் வாழ்வு பாழாவதா?

இள :— குமுதவல்லி!...... நீ சிறு குழந்தை...... உலகமறியாமல் பிதற்றுகிறாய்.

குமுத :— சிறு குழந்தையாகவே இருந்தேன். ஆம். உலகமும் தெரியாது; ஆனால் அது நான் தங்களைப் பற்றிக் கேள்விப்படுமுன், தங்களுடன் பழகுமுன்.

இள :— பெண்ணே! நான் காதலுக்குச் சற்றும் அருகதையற்றவன், உலகப்பற்றில்லாதவன், இதைப்பற்றி மீண்டும் நான் பேச விரும்ப வில்லை. உன் நிலைக்கு அனுதாபப் படுகிறேன்.

குமுத :— வெறும் அனுதாபம் காதலாகாது. எனினும் அனுதாபம் முளைத்தது அன்பில், அன்பின் விளைவு காதலாவது கடினமில்லையே!

இள :— மன்னித்துக்கொள். நீ கலைஞான முள்ளவள். ஒரு மனப்பட்ட காதலன்றோ திருமணமாகும்? தயவு செய்து நீ ஏற்ற மணவாளனைத் தேடிக் கொள்வது உத்தமம். என்னை எதிர்பார்த்து ஏமாற வேண்டாம்.

குமுத :— (யோசித்து) ஆ! அப்படியானல் நான் வாழ்வை இழக்கவேண்டியவள்தானா?

(பைங்கிளி தோன்றுகிறாள்)

பை :— குமுதவல்லி! மிகவும் அழகாக இருக்கிறது உன் வாதம்!

குமுத :— யார்? இளவரசியா! . தாங்கள் வந்த காரணம்?

பை :— என் உரிமை களவு போக நான் ஒரு போதும் இணங்கமாட்டேன். இளநாகரே! உமது காதல் எனக்குத்தான் சொந்தம்.

குமுத :— இளவரசி! ..சகல அம்சங்களிலும் சிறந்தவள்தானே ஒரு வீரருக்கு, ஒரு கலைஞருக்கு வாழ்க்கைத் துணைவியாகத் தகுந்தவள்?

பை :— (சினந்து) மன்னன் மகளிடமா போட்டியிடுகிறாய்...?

குமுத :— மன்னருக்கும் குரு என் தந்தையார் என்பது நினைவிருக்கட்டும்.

இள :— (இடைமறித்து) நிறுத்துங்கள் வாதத்தை, உங்கள் தந்தைமார் மிகப் பெரியவர்கள்தாம். அவர்களின் குருட்டுச் செயல் காரணமாக நாடு படும் அல்லல் உங்களுக்குத் தெரியுமா?

குமுத :— என் தந்தையாலா?...

இள :— "வான் நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி" என்பதை மன்னவர் மறந்தார். உணவுக்கும் உடைக்கும் தொழிலுக்கும் மக்கள் அலைவதும், வாணிபம் குன்றி நாட்டின் பொருளாதாரம் போன்றுவதும் அறியாமல், மதுவில் மயங்கி இருப்பதோ மன்னவர் கடமை?

பை :— என் தந்தையையா குறைகூறுகிறீர்கள்?

இள :— இருவரையுமே; 'மதுவும் மங்கையும் தந்து, மகேசு வரனையடைய மார்க்கம் கூறி, மன்னனின் மடமையை வளர்த்து, நாடு செழித்த தென்று நம்ப வைக்கிறார் சம்பந்தாண்டார்! உண்மையில் நாடு வீழ்ச்சியை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதை அறியாமல் இழிவுக்கே விரைந்து கொண்டிருக்கிறார் மன்னன்!

(தொடரும்)

1-ம் பக்கம் தொடர்ச்சி

கர்ப்பிணிகள்.

இந்தப் பேய்களையும் பிசாசுகளையும் நம்பிக்கொண்டு பேதை ஜனங்கள் கர்ப்பிணிகளை படுத்தும் பாடுதான் சகிக்க முடியாததாகும். சிக்கலான வியாதிகளால் அவதியுறும் கர்ப்பிணிகளை மருத்துவ சாஸ்திரத்திற் தேர்ச்சி பெற்ற பெண் வைத்தியர்களிடம் கொண்டுபோய் அவர்களது அருமையான உயிர்களை மீட்காமல் பேய் பிசாசு என்று கொடுமைப்படுத்தி அகால மரணத்திற்குள்ளாகும் நிகழ்ச்சிகளை நாம் நூற்றுக்கணக்காக காண்கின்றோம். ஆகவே சகோதரிகாள் நீங்கள் மூட நம்பிக்கைகளின் புரட்டை உணர்ந்து அவைகளை உதறித்தள்ளவேண்டுமென்றே இதனை இவ்வளவு தூரம் வற்புறுத்தினேன். இன்னும் இதுபோன்ற நூற்றுக்கணக்கான மூட நம்பிக்கைகள் பெண் சமூகத்தின் உள்ளங்களில் வேரூன்றி போய்க்கிடக்கிறது. அவை யாவற்றையும், எழுத இச் சிறு கட்டுரையில் இடம் போதாவாகையால் சமயம் வாய்க்கும்போது எழுதுகின்றேன். இத்தகைய பேதமைகள் ஒழிவதற்கு கல்வி மிக அவசியமாயிருக்கிறது. எவ்வாற்றானும் சிரமமெடுத்து பத்திரிகைகள் வாசிக்கு மளவுக்கேனும் கல்வி கற்றாக வேண்டும். சிலர் எங்களுக்கு 20 வயதாகிவிட்டது 30 வயதாகிவிட்டது எப்படி படிப்பது, நமக்கெல்லாம் படிப்பெதற்கு? என்கிறார்கள்? இவையெல்லாம்பேதமையே மாதர்கள் உலக அனுபவம் பெறவும், குடும்ப நிர்வாகத் திறமை பெறவும், தொழில் முறையிலீடுபட்டு சம்பாதியம் பெறவும். தம்மக்களை வீரர்களாகவும் சுருங்கக் கூறுமிடத்து சுதந்திர நல்வாழ்வை விரும்பும் ஒவ்வொரு பெண்களுக்கும் கல்வியொன்றே இன்றியமையாத துணை என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

அப்படியே கல்வி கற்க வசதியும் உதவியும் இல்லாதவர்களுங்கூட படித்த சகோதரர் சகோதரிகள் மூலம் பகுத்தறிவூட்டி சமதர்ம நெறியை புகட்டும் சுயமரியாதை பத்திரிகைகளை வாசிக்கும்படி காதால் கேட்டு மனதால் சிந்தித்து அறிவால் தெளிவடைதால் வேண்டும்.

ஆகவே, அன்பார்ந்த சகோதரிகாள்! நாம் நமது சமூக வாழ்வில் சமத்துவம் பெறவேண்டுமானல் நம்மிடமுள்ள பேதமைகளையும், குறைபாடுகளையும், அகற்றிவிடவேண்டுமானல் நம்மிடமுள்ள பேதமைகளையும், குறைபாடுகளையும் அகற்றி நம்மிடமிருந்து பறிமுதல் செய்து கொண்டிருக்கும் உரிமைகளைப்பெற, வீரமோடு போராடி அவற்றை அடைதல் வேண்டும் இப்போராட்ட வழியில் நமக்கு ஏற்படும் இன்னல்கள் எவையோ அவை யாவற்றையும் இனிமையாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். நமது முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாய் பகுத்தறிவிற்கு எட்டாதவைகளாய் சமத்துவத்திற்கு சத்துருக்களாய் சமதர்மத்திற்கு விரோதிகளாய் நிற்பவர்கள், நிற்பவைகள், எவர்களோ, எவையோ, அவை—அவர்கள் மகாத்மாக்களாயினும், கடவுள்களாயினும், சக்கிராதி பதிகளாயினும், முனிசிரேஷ்டர்களாயினும் அவர்கள் ஒருவரையும் பொருட்படுத்தாமல் அவைகள், சாத்திரங்களாயினும், வேதங்களாயினும், புராணங்களாயினும், இதிகாசங்களாயினும், மதங்களாயினும், மனு நீதிகளாயினும், "நகரப் பூச்சாண்டி"களாயினும் அவை யாவற்றையும் "ஆராய்ச்சி அறிவு" என்னும் ஞான வாளாயுதத்தால் வெட்டி வீழ்த்தி சுதந்திரப் பாதையை செப்பனிடுதல் வேண்டும்.

இறுதியாக சகோதரிகாள்! நம்மை அறிவில்லா அந்தகாரப் படுகுழியிலாழ்த்தி அடுப்பங்கரையே சொர்க்கமெனக் கருதும்படி ஒடுக்கி வைத்திருந்த காலம் மலையேறிவிட்டது. சுதந்தரப்பாஸ்கரன் உதயமாகி விட்டான்! சமத்துவ, சமதர்ம, சண்டமாருதம் எண்டிசையும் வீசுகின்றது! விஞ்ஞானக் கடல் கொந்தளிக்கின்றது! காலச்சக்கிரம் வேகமாக சுழல்கின்றது! பத்திரிகை உலகம் நம்மை தட்டி எழுப்புகின்றது! இந்திய சகோதரிகாள்! இன்னும் உறக்கமா? விழிமின்! எழுமின்!! சமத்துவம் பெறும் வரையில் சலியாது உழைமின்!!! பேதமையை யகற்றினாலன்றி க்ஷேமம் பெற வழியில்லை என்பதை உணர்மின்!!!!

"சமதர்மம் ஓங்குக!"

சென்னையில்
பெரியார் பிறந்த தின விழா

சென்னை 11-வது வட்டப்பொது மக்கள்சார்பாக நேற்று 24—9—46 ஆந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்குமேல், கினிமா செண்டிரலுக்கடுத்த சமயவரத்தம்மன் கோயிலருகில் பெரியாரின் 68-வது பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது. தோழர் S. தங்கராஜ் அவர்கள் தலைமை வகித்தார். பிறகு, புலவர் பு. செல்வராஜ் அவர்கள் கொடியைப் பறக்க விட்டார்.

பெரியார் படத்தைத் தோழர் ஏ. எஸ். இராமன் அவர்கள் திறந்து வைத்தார். தோழர் பாவலர் எஸ். எஸ். அப்துல் காதர் (காயல் பட்டணம்) அவர்களும், பி. வேலாயுதம், பி. குப்புராவ் முதலியவர்களும் பெரியாரின் தொண்டைப் பாராட்டிப்பேசியபின் தோழர் எக்ஸ். சேவசகாயம் நன்றி கூற கூட்டம், இரவு 9-மணிக்கு இனிது முடிந்தது.

வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
எங்கும் பிரசித்தி பெற்ற
இராஜாளி எண்ணை
எந்த மருந்தினாலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தசீழ் வெள்ளை, நீரடைப்பு, நீர் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி நரம்புவலி, வீக்கம், சொரி, சிரங்கு, ஊரல், படை, கிரந்தி, புண், கைகால் பிடிப்பு, தந்திசூலை, நாபிரணம், செற்பரணம், முதலிய மிக கொடிய மேக வியாதிகளை மறுமுறை வராதபடி வேரற நீக்கக் கூடிய மருந்து. இதற்கு நிகர் வேறு இல்லை என்பதற்கு உறுதி கூறுகிறோம். குறைந்த விலை நிறைந்த குணம்.
பூர்ண குணத்திற்கு உத்திரவாதமுள்ளது புட்டி 1-க்கு ரூ. 2—0—0
தயாரிப்பவர்: சித்தவைத்திய பண்டிட் S V. இராஜரத்தினக் கவுண்டர், R. I. M (P)
சேர்மேன் நம்மண்ண செட்டி ரோட், அரிசிப்பாளையம், சேலம், S. I.

சென்னை மாகாண நெசவுத்தொழில்
பாதுகாப்பு மாநாடு
சென்னை, சென்ட் மேரிஸ் ஹாலில்
5—11—46ல் நடைபெறும்.
தலைவர்:—முன்னாளமைச்சர் S. முத்தையா முதலியார்
வரவேற்பாளர்:—காஞ்சிபுரம் அ. க. தங்கவேலர், ஜனப் அப்துல் மஜீத் M. L. A., திறப்பு விழாவாற்ற அழைக்கப் பட்டிருக்கிறார்.
நெசவுத்தொழிலில் சம்பந்தப்பட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வார்கள்.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram, (N. A.)

1ம் பக்கம் தொடர்ச்சி

சொற்ப நிலபலனுள்ள மலாய்க்காரர்களுக்கும் சீனத் தொழில்காரர்களுக்கும் நிலச்சொத்து ஈட்டின்மேல் அதிகமான வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தார்கள். ஆனல் ஜாக்கிரதையாய்த் தொழில் நடத்திய பாங்கிச்காரர்கள். பணந்தர மறுத்தபோதெல்லாம் இவர்கள் பண உதவி [illegible]ய்து மலாயா செழிக்கவழி திறந்து [illegible]டார்கள், மலாயாவில் கிட்டத்தட்ட [illegible] கோடி ரூபாய் முதல் போட்டிருக்கிறார்கள். தொழில் முறையில் சீனர்களுடைய பெரிய பெரிய ரப்பர் தோட்டங்கள் இவர்களில் சிலர் கை வசமாயிருக்கின்றன. இது பயிரிட்ட மொத்த எக்கராவில் நாலு சத விகிதம் இருக்குமென்று மதிக்கப்படுகிறது.

மலாயாவிலுள்ள இந்தியர்களில் 70 சத விகிதம் பேர் தென்னிந்தியர்கள். பெரும்பாலோர் தோட்டங்களிலே வேலை பார்க்கிறார்கள். ரயில்வே சுகாதார சபை, பொதுஜனச்சேவை இலாகா இவைகளில் பலர் வேலை பார்த்து வருகிறார்கள்.

1937ல் பயிரான மொத்த ரப்பர்த் தோட்ட விஸ்தீரணம் 33,02,170 எக்கர் இதில் 2026348 எக்கர் எஸ்டேட்டுகள். 1905ல் 50,000 எக்கர் தான் இருந்தது, என்றால் எவ்வளவு தீவிரமாக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பது புலனாகும்.

மலாயாக்கூலிகள் சட்டம் இந்தியாவிலுள்ள சட்டத்தைவிட மேலானது. தோட்ட முதலாளிகளிக்குத் தமிழர்கள் மேல்தான் பிரியம். ஏன்? தமிழர்கள் பணிவுள்ளவர்கள்; அப்பாவிகள், பன்வின் [illegible]டுங்காலமாகச் சமூக பொருளாதார [illegible] துறைகளில் அவர்கள் [illegible] கட்டுப்பட்டே வாழப் பழகிவிட்டபடியால் அழிக்கமுடியாதபடி அவ்வளவு ஆழமாய் அடிமை வடு அவர்கள் மனத்தில் பதிந்து விட்டது. இதை எளிதில் போக்க முடியாது. இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று தோட்ட முதலாளிகளுக்குத் தெரியும். நிர்த்தாட்சண்யமாய் இவர்களை அவன் நடத்துவான். கிடைத்தது சரி, என்று தந்ததை வாங்கிப் பட்டினி கிடந்து மிச்சம் பிடித்து இந்தியாவிலுள்ள தங்களுடைய குடும்பங்களுக்கும் பணம் அனுப்புவார்கள்.

சீனக்கூலிக்கு நாள் சம்பளம் ரூ. 1—8—0 முதல் 2—4—0 வரை. தமிழனுக்கு 10 அணு முதல் 11 அணு வரைதான், இவ்வளவு தாரதம்யம் ஏன் என்று கேட்டால் தமிழனுக்கு உபரியாக ஆஸ்பத்திரி வீடுவாசல் பிரசவம் முதலிய பலவிதமான செலவுகள் செய்யவேண்டியிருக்கிறதாகவும் சீனனுக்கு அவன் சம்பளத்தோடு கணக்குத் தீர்ந்தது என்றும் தோட்ட முதலாளி சொல்லுகிறான்.

தமிழனுடைய கூலியை அதிகப் படுத்தினல் அவன் சோம்பேறியாகி விடுவானும். இந்த விநோதமான விவரத்தை 1925ல் வெளியான தோட்ட முதலாளிகள் சங்க அறிக்கைக் கூறுகிறது.

சீனக்கூலிகளை ஒப்பந்தம் செய்வதில்லை. அதனல் சம்பள நிர்ணயம் கிடையாது. சேர்ந்து காரியம் முடிப்பதிலும் தொழிலாளர் சங்கம் அமைத்து வேண்டியதைச் சாதித்துக் கொள்வதிலும் இவர்கள் படுசூரப்பேர்வழிகள். ரப்பர் விலை ஏற ஏற இவர்களுடைய கூலியும் ஏறிக்கொண்டே போகும். மறியலும் செய்வார்கள். தமிழரிடம் ஒற்றுமையில்லை ஒன்றுசேர மாட்டார்கள். "விதி, விதி" என்று பேசி என்ன கொடுமைப் படுத்தினலும் சகித்துக் கொள்ளுவார்கள்.

ரப்பரிலும் ஈயத்திலும் கொள்ளைப் பணம் வருகிறது. உலக ஈய உற்பத்தியில் 33 சதவிகிதமும், ரப்பரில் 40 சதவிகிதமும், அமெரிக்காவுக்குப் போகின்றன. 1930ல் அமெரிக்காவில் ஏற்பட்ட வியாபார மந்தம் மலாயாவை மிகக் கடுமையாய்ப் பாதித்துவிட்டது. ரப்பர் விலை படுபாதாளத்துக்குப் போய்விட்டது. 1,90,000 பேர் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பி வைக்கப் பட்டார்கள்.

உழைத்துச் சலித்து வாடிப்போனவர்களை யெல்லாம் சாறுபிழிந்த எலும் பிச்சைத் தோல்மாதிரி இந்தியாவில் கொண்டு வந்து தள்ளுகிறார்கள்.

5-ம் பக்கம் தொடர்ச்சி

பழக்க வழக்கமும், பயிற்சியும், சந்தர்ப்பமுமே அமைந்து வருகின்றன. அந்தந்த தொழிலில் வேண்டுமானல் ஒருவேளை தகுதியோ திறமையோ அவர்களிடம் காணப்படலாமே யல்லாது, பொதுவான திறமையோ தகுதியோ காணமுடியாது.

இந்து மதத்தின் பெயரால் வகுக்கப் [illegible] பட்ட சாதி முறைப்படி, [illegible] கற்பிப்பதும் உயர் சாதிக்காரர்கள் என்று சொல்லப்படும் பார்ப்பனர்களுக்குத்தான் உரிமையாக இருந்துவந்தது. அதனல் கல்வி கேள்வியில் அவ்வகுப்பார்தான் முன்னேற்ற மடைய முடிந்தது. அவர்களைத் தவிர மற்றவர்கள் கற்பதோ கற்பிப்பதோ தவருன காரியமாகவும் கண்டிக்கவும், தண்டிக்கவுமான காரியமாகவும் ஏற்படுத்தப்பட்டுவந்தது. அதற்கான விதிகளையும் ஏற்படுத்தி அவைகளை அமுல் நடத்தியும் வந்தார்கள். இதற்கு பழையவரலாறுகளில் பல சான்றுகள் இருந்துவருவதைக் காணலாம். அப்படியே கற்க வேண்டுமென்று யாராவது விரும்பினல் கற்பிப்பவர்கள் அவர்களைத்தவிர (பிராமஞேத்தமர்களை)த் தவிர வேறு யாரையும் காணமுடியாது. அவர்கள் கற்பிக்கும் கல்வியின்மூலமாக உண்மையிலே அவர்களைத் தவிர வேறும் யாரும் அறிவு விளக்கமோ திறமையோ பெறமுடியுமோ, பெறத்தான் இடமளிப்பார்களா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும். இதனுலேயே அவர்களைத் தவிர மற்றவர்கள் கல்வியறிவு பெறமுடியாமல் போய்விட்டது; மற்றவர்களுக்கு கற்கவேண்டும் என்ற அவாவும் ஏற்படாமல் போய்விட்டது; தகுதியும் திறமையும் எல்லாரும் பெற முடியாமல் போய்விட்டது.

தகுதியும், திறமையும் எல்லோரிடமும் எதிர்பார்க்க வேண்டுமானலும் எல்லோருக்கும் சமய சந்தர்ப்ப மளிக்கப்படவேண்டும். அவர்களுடைய சற்று சார்பு பழக்க வழக்கம், பயிர்ச்சி அளிப்பும், சந்தர்ப்பங்களையாவும் திறமையும் வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும் அவைகளைச் செய்யாமல், அதற்கு இடம் கொடுக்காமல் தகுதியையும் திறமையையும் கொண்டு ஒவ்வொருவரையும் அளப்பதென்பதோ நிறை போடுவதென்பதே ஒரு நாளும் நியாயமும் அறிவுடைமையுமாகாது.

உலகில் மக்களாகப் பிறக்கிற ஒவ்வொருவரும் பிறக்கும்போதே தனித்திறமையும் தகுதியும் பெற்றவர்களாய் பிறக்கிறார்கள் என்று கூறமுடியாது பிறக்கும்போது எல்லோருடைய திறமையும் ஒரே அளவினதாகத் தான் பெரும்பாலும் இருக்கும். திறமையில் ஆயிரத்தில் ஒருபாகம் பெற்றோர்களது திறமை குழந்தைகளிடம் பதிந்து இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. அதுவும் அனுமானப் பிரமாணத்தில் நிரூபித்துக் காட்டப்படவில்லை. அவரவர்களின் திறமை மேலே எடுத்துக் காட்டியுள்ள காரணங்களை முன்னிட்டு ஒளிபெறவோ, மங்கிக் கிடக்கவோ முடிகிறது. உதாரணமாக ஒரு பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அய்யரோ, அய்யங்காரோ வக்கீலாக இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவரது பிள்ளை பள்ளியில் படிப்பதாக வைத்துக்கொள்வோம். அதுபோலவே, ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு 'தொழிலாளியின் பிள்ளையும் பள்ளியில் படிப்பதாக வைத்துக் கொள்வோம். இவர்கள் இருவரும் கல்வியில் சம நிலையினராய் விளங்க முடியுமா? தகுதியிலோ திறமையிலோ சம நிறையினராய் விளங்க முடியுமா? அய்யரின் பிள்ளை அன்றாட வாழ்க்கை திறமையை உயர்த்தக்கூடிய [illegible] [illegible]றாட வாழ்க்கை திறமையை வளர்க்க முடியாத நிலையிலிருப்பதையும் காணலாம். இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானல், அய்யர் வீட்டிலோ யாவரும் கற்றவர்களாயிருப்பார்கள், அய்யர் வீட்டுப்பிள்ளையுடன் சேரும் பிள்ளைகளும் படித்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளாகவே இருக்கும். இதனல், கல்வி வளர்ச்சிக்குதவியான சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

மற்றும், கல்வி வளர்ச்சிக்குச் சாதனமான புத்தகங்கள் விளக்கு முதலிய உபகரணங்கள் தாராளமாக் கிடைக்கும் அய்யர் வீட்டுப் பிள்ளைக்கு. ஆனல், ஆதி திராவிடத் தோழர் வீட்டுப் பிள்ளைக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடைப்பதில்லை. கிடைக்க வசதியுமிருப்பதில்லை. இந்த நிலையிலுள்ள இருபிள்ளைகளிடமும் தகுதியும் திறமையையும் ஒரே தன்மையானதாக எதிர் பார்ப்பதென்பதோ அவரவர்களின் நியாயமான பாங்கு பெறமுடியாமல் இத்திறமையையும் தகுதியையும் காட்டி தடுப்பதென்பதோ ஒருநாளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரியமாகாது.

அக்காலில் மக்கள் யாவரும் எல்லாத் துறைகளிலும் முன்னேறுவதை, சாதியைக் காட்டிச் சாத்திரத்தைக் காட்டிப் பரம்பரை வழக்கத்தைக்காட்டி தடுத்து வந்தனர் இன்று அவைகளுக்கெல்லாம் சாவுமணி அடிக்கப்படவே, தகுதியையும் திறமையையும் காட்டித் தடுத்து வருகிறார்கள். இதை இனி ஒரு நாளும் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாது. இதை முளையிலே கிள்ளி எறிய வேண்டும். நாம் (திராவிடர் கழகத்தார்) மட்டுமல்ல காங்கிரஸ் திராவிடர்களும் இன்று ஓரளவுக்கு உணர்ந்து வருகிறார்கள். முற்காலில் திராவிடர்கள் தங்களுக்குள் பகைமை கொண்டு தனித்து நின்றதினலே, திராவிடர்களாகிய நாம் இந்நிலைக்கு ஆளானோம். இப்பொழுதாவது, நமக்குள் பகை கொள்ளாமல், நமது இழிநிலையைப் போக்க ஒன்று பட்டு அவர்களது சூழ்ச்சிகளைத் தகர்த்தெறிவோமானல், திராவிட சமுதாயம் ஒப்பற்ற சமுதாய மாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு எடுத்துக் காட்டாக காங்கிரசை முழுக்க முழுக்க ஆதரிக்கும், "பிரசண்ட விகடன்" என்னும் கிழமைத்தாள் **தகுதியையும் திறமையையும்** கண்டித்து எழுதியிருப்பதின் சிலபகுதிகளைக் கீழே தருகிறோம். திராவிடத் தோழர்கள் அரசியலிலே எக்கருத்துடையவர்களா யிருந்தபோதிலும் திராவிட சமுதாயம் முன்னேற்றத்தில் கருத்து ஒன்றுபட்டவர்களாப் 'பிரசண்ட விகடன்' நடந்து கொள்கிற போக்கை முன்னிறுத்தி ஒன்றுபட்டுழைக்க வேண்டுமென ஆசைப்படுகிறோம்.

> "தகுதி, திறமைஎன்ற பெயரால் இதுவரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் மூலம் தமிழ்மக்கள் எவருக்கும் விகிதாச்சார முறையில் கிடைக்கப் பெற்று வந்த நலங்கள் அனைத்தையும் நம் மாகாணக் காங்கிரஸ் மந்திரி சபை பறித்துக்கொள்ளும் முறையில் காரியங்கள் செய்யத் தொடங்கி யிருப்பதைக்கண்டு நாம் வருந்துகிறோம்.
>
> [illegible] வகுப்பின[illegible] "பிரதமர் ஸ்ரீ பிரகாசத்து[illegible]றக்கு இணங்க அவரது மந்திரிசபை "தகுதி, திறமை" என்ற காரணங்களைச்சொல்லி இஞ்சினியரிங் வைத்தியக்கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்திருக்கும் ஏற்பாடுகளைக் கண்டு நியாய உணர்ச்சியுள்ள யாரும் வருந்தாமல் இருக்க முடியாது.
>
> உதாரணமாக இவ்வாண்டில் இஞ்சினியரிங் கல்லூரியில் தகுதி மதிப்பீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 69 மாணவர்களில் 57 பேர் பிராமணர்கள். பார்ப்பனரல்லாத தமிழ் மக்களில் 8 பேரும், இந்திய கிறிஸ்துவ, முஸ்லிம்களுக்கு முறையே இரண்டு ஸ்தானங்களாக மொத்தம் 4 ஸ்தானங்களும் கொடுத்த 'ஒரு குலத்துக்கு ஒரு நீதி' வழங்கியுள்ளார்கள்.
>
> அதுபோலவே வைத்தியக் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 67 மாணவர்களில் 47 பேர் பிராமணர்கள், பார்ப்பனரல்லாதார் 14, இந்திய கிறிஸ்துவர் 6 பேருக்குமாக மொத்தம் பிராமணரல்லாத மாணவர்களுக்கு 20 ஸ்தானங்கள் கொடுத்துத் தகுதிற்கு மதிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.
>
> சென்ற இருபது ஆண்டுகளாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உத்திரவு அமுலில் இருந்து வருகிறது இதன் மூலம் தமிழ்நாட்டில் வாழும் பல்வேறு வகைப்பட்ட மக்களுக்கும் நியாயமான

(தொடரும்)

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St. Tiruvettipuram. (N. A.)

2ம் பக்கம் தொடர்ச்சி

பாபிஷேகம் செய்திருந்தார். அப்பொழுதுதான் பத்தாயிர ரூபாய் செலவில் நவரத்ன கிரீடம் செய்து சுவாமிக்கு சமர்ப்பித்திருந்தார். அவருடைய சேவைகளை மெச்சி சென்னை இந்துமத பரிபாலன போர்டார் அவருக்குக் **"கலியுக வள்ளல்"** என்ற பட்டத்தை அளித்திருந்தனர். பலர் **'வள்ளல்'** என்ற பெயரைக் கேள்விப்பட்டுப், பாடசாலை ஏற்படுத்துவதற்காகவும், வாசகசாலைகளை நிறுவுவதற்காகவும் நன்கொடைக்காக அவரை நெருங்கிப் பார்த்தனர். ஆனால் கடவுள் சம்பந்தப்படாத அனுவசிய விஷயங்களுக்குப் பணங்கொடுக்கக் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

ஏழைகளுக்கு உதவி செய்வதும், தம், வீட்டுவேலைக்காரர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுங்கூட அனுவசியமான விஷயம் என்பது அவர் எண்ணம். எனவே வேலைக்காரர்களுக்கு ஐந்து ரூபாய்களுக்கு மேல் சம்பளம் கொடுப்பதும், பிச்சைக்காரனுக்குக் காலணு போடுவதும் அவர் அகராதியிலேயே கிடையாது. ஆனால் இந்தத் திட்டம் அவரிடம் வேலை செய்ய வருபவர்களுக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவரிடம் வேலைக்காக வருபவர்கள் பத்து நாட்கள் வேலை செய்வதும், பிறகு கையில் கிடைக்கும் ஏதாவது ஒரு வெள்ளிச் சாமானுடன் வெளியேறி விடுவதும் வழக்கம். இதற்கு மாருக செட்டியாரிடம் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வேலைபார்த்து விட்டான் கண்ணப்பன். கண்ணப்பன் உண்மையாகவே நல்ல உழைப்பாளி. [illegible]வேலை செய்யுமிடத்தில் தனக்கு எச[illegible] வருபவரிடம் பூரண விசுவா[illegible] நடந்துகொள்பவன். வீட்டு [illegible] முதற்கொண்டு தோட்ட[illegible]ரை தளராமல் செய்து வந்தான். அவனைத் தவிர செட்டியாரிடம் வேறு ஆளே கிடையாது. "நம்பிக்கையானவன்" என்று செட்டியார் இடமே பெயரெடுத்து விட்டானென்ருல் கேட்கவா வேண்டும்!

ஆனால் சம்பளம் மட்டும் ஐந்து ரூபாய்களுக்கு மேல் ஓடவில்லை. அகவிலை ஏறி விற்கும் இந்தக் காலத்தில் அவன் குடும்பத்துக்கு இது எந்த மூலை பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? அதிகப்படி சம்பாதித்தாலல்லது வாழமுடியாது என்ற நிலை ஏற்பட்டவுடன் செட்டியாரிடம் மன்ருடிப் பார்த்தான். பலனே இல்லை. ஆகையால் இப்படி தன் வயிற்றிலடித்து விட்டுப் பெரும்பொருளை எப்பமிடும் கடவுளிடத்தும், செட்டியாரிடத்தும் அவனுக்குக் கசப்பு ஏற்பட்டுவிட்டது. இதனுல் அவர் முன்னிலையிலேயே தெய்வ நிந்தனை செய்யும் அளவுக்கு கண்ணப்பன் வந்துவிட்டான். அவன் மீது செட்டியாருக்கு ஆத்திரந்தான் என்ருலும் சொன்னுல் அவன் வேலை செய்ய வராவிட்டால் என்ன செய்வது என்று பயந்து பேசாமலிருந்து விட்டார்.

கும்பாபிஷேகம் நடக்க இருந்த அன்று கண்ணப்பன் மனைவி திடீரென நோய்வாய்ப்பட்டாள். பூரண கர்ப்பிணியானதால் அவள் நிலை மிக அபாயகரமாக ஆகிவிட்டது. கண்ணப்பன் செட்டியாரிடம் ஓடிவந்து விஷயத்தைக்கூறி அன்று, தான் வேலைக்கு வரமுடியாதென்றும், அடுத்த மாத சம்பளத்தை கடனுகக் கொடுக்கும்படி வேண்டிகொண்டான். பழிவாங்குவதற்குத் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த செட்டியார் கொஞ்சங்கூட இரக்கமின்றி அவன் வேண்டுகோளை நிராகரித்துவிட்டார். அதனுல் ஆத்திரமடைந்த கண்ணப்பன் அவரைத் தாறுமாருக பேசிவிட்டு அவரிடம் வேலை செய்வதில்லை என்ற முடிவுடன் வீட்டுக்கு வந்தான்.

பத்து நாட்களை எப்படியோ ஓட்டிவிட்டான். அப்புறம் வாழ்க்கை நடத்த அவனுல் முடியவில்லை. தகுந்த உபசாலையில்லாததால் அவன் மனைவியின் நிலை நாளுக்கு நாள் கவலைக்கிடமாக மாறிக்கொண்டிருந்தது. அவன் மூன்று வயதுக்குழந்தை உணவின்றி மெலிய ஆரம்பித்தது. சூழ்நிலையால் உந்தப்பட்டுக் கண்ணப்பன் மறுபடியும் செட்டியாரிடம் வேலைக்கு வந்தான். அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். வேறு வேலையும் கிடைக்கவில்லை.

ஏக்கத்தால் வாடிப்போய் எதிர்பாரா விதமாய் ஒரு நாள் கோயில் பக்கம் வந்தபோது கோயிலில் உச்சிகால பூஜை நடந்து கொண்டிருந்தது. பிரசாதம் கிடைக்கும் என்ற எண்ணம் எழவே, அவனுக்குக் குழந்தையின் ஞாபகம் ஏற்பட்டது. ஆவலுடன் குருக்கள் சாமிநாதய்யரை நெருங்கி தன் நிலையைக்கூறி குழந்தைக்காக பிரசாதம் கேட்டுப் பார்த்தான். செட்டியாரிடம் அவன் நடந்துகொண்ட மாதிரியைப் பற்றி அவர் கேள்விப் பட்டிருந்தார் ஆதலால் அவனுக்குப் பிரசாதம் கொடுக்க மறுத்துவிட்டார். இதைக் கேட்ட கண்ணப்பன் ஆத்திரத்தால் மனங்குமுறினன். கோயிலைக் கொள்ளையடித்து விடுவதாகச் சபதம் செய்துவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்ருன். நவரத்ன கிரீடத்தைத் தட்டிக் கொள்வதற்கு ஒரு நல்ல காரணத்தைத் தேடிக்கொண்டிருந்த சாமிநாதய்யர் கண்ணப்பனின் பேச்சைக் கேட்டு புன்னகை புரிந்தார். பிறகு காரியத்தைபும் சாதித்துக்கொண்டார். அதன் விளைவுதான் கண்ணப்பனுக்கு ஒரு வருடக் கடுங்காவல்.

* * *

சுமார் ஒரு வருடத்துக்குப் பிறகு ஒருநாள் இரவு செட்டியார் வீட்டில் செட்டியாரும் குருக்களும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

"என்ன... அந்தப்பயல் விடுதலை அடைஞ்சுட்டான் போலிருக்கே" என்ருர் செட்டியார்.

"அவன் கிடக்கிருன் கழுதை. சாமி சொத்தை திருடியவன் உருப்படவா போகிருன். அது கிடக்கட்டும் ஒரு முக்கிய விஷயம்ஞ" என்று குருக்கள் பீடிகை போட ஆரம்பித்தார் 'என்ன' என்ருர் செட்டியார்.

"நேற்று இரவு சுவாமி என் கனவில் தோன்றிஞர், தமக்கு ஒரு தங்கக் குடை வேண்டுமென்றும், அதைச் செய்து சமர்ப்பிக்கும் பக்தன்யாராக இருந்தாலும் அவனைத் தம் கடைக்கண் நோக்குதலுக்குப் பாத்திரப் படுத்திக் கொள்வதாகவும் கூறிஞர்... அந்த பாக்யம்... தங்களுக்குக் கிட்டவேண்டுமென்பது என் அவா...!" என்று தேனெழுக குருக்கள் விஷயத்துக்கு வந்தார்

செட்டியார் பொறுமையுடன் சிரித்துக்கொண்டே "சுவாமிக்கு என்ன செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியாதா என்ன? அந்த மடப்பயல் தான் கிரீடத்தைத் திருடிக்கொண்டு போயிட்டானே என்று யோசனை செய்துகொண்டு இருந்த போது; ஒரு தங்கக்குடை செய்து சமர்பித்து விட்டால் சரியாகப் போய்விடுமென்று என் மனைவி யோசனை சொன்னுள். உடனே செய்துவிட்டேன். நல்ல நாளாகப் பார்த்து சுவாமிக்கு சமர்பிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். சுவாமியே உத்தரவிட்டு இருப்பதால் நாளையே செய்துவிட வேண்டியது தான். குடையைப்பார்க்கிறீர்களா?" என்று கூறிவிட்டு உள்ளே சென்று சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு தங்கக் குடையைக் கொண்டுவந்து கொடுத்தார்.

"பேஷ்—நீரல்லவா உண்மையான பக்தன்" என்று கூறிக்கொண்டே. குருக்கள் குடையைக் கையில் வாங்கிஞர். அதே நேரத்தில் பின்புறமிருந்து யாரோ கனைக்கும் சப்தம் கேட்கவே இருவரும் திரும்பிப் பார்த்தனர். கையில் அறிவாளைத் தாங்கியவாறு பயங்கரப் புன்னகையுடன் கண்ணப்பன் நின்றுகொண்டிருந்தான். முகமெல்லாம் கருத்து, மயிர் அடர்ந்து பார்ப்பதற்கு பயங்கரமாகக் காணப்பட்டான் செட்டியாரும், குருக்களும் திகைத்துப்போய் "...கண்...ணப்பன்" என்று அச்சத்தால் அலறினர்.

"சுவாமிகளே அதை என் கையில் கொடுத்து விடுங்கள். பாவம்... உங்களுக்கு ஏன் சிரமம். நீங்க செய்ய இருக்கும் காரியத்தை நானே செய்து விடுகிறேன்" என்று கடுமையான குரலில் கேட்டான் கண்ணப்பன். குருக்கள் ஒன்றும் பேசாமல் அதை அவன் கையில் கொடுத்துவிட்டார். ஒரு பயங்கரச் சிரிப்புடன் கண்ணப்பன் இருளில் மறைந்து விட்டான். செட்டியாரும், குருக்களும் [illegible] பார்த்துக்கொண்டனர்.

மண்ணில்லை ஆனால் செடி வளருகிறது!

விஞ்ஞானத்தின் வளர்ச்சி

பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் உள்ள பல விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகளில் மண்ணை இல்லாமல் ரசாயனப்பொருள் சம்பந்தப்பட்ட வெறும் நீருள்ள தொட்டிகளில் காய்கறிச்செடிகளை வளர்த்து வருகிருர்கள்.

பிரான்சில் உள்ள ஒரு விஞ்ஞா[illegible] தோட்டத்தில் இம்முறைப்படி பயிர் செய்யப்பட்ட திராக்ஷைப்பயிர்கள் 30 அடி உயரத்திற்கு ஓங்கி வளர்கின்றன.

சாதாரணமாக ஒரு ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யப்படும் தக்காளிச்செடிகளிலிருந்து சுமார் 5டன் பழம் கிடைக்கும். ஆனால் இம்முறைப்படி பயிர் செய்வதில் ஒரு ஏக்கராவுக்கு 200டன்னுக்கு மேல் பலன் கிடைக்கிறது.

மேற்கு அமெரிக்காவில் விஞ்ஞா தோட்டம் உலகிலுள்ள விஞ்ஞா[illegible]களின் கவர்ச்சியை இழுத்து வருகிறது.

இங்கு உருளைக்கிழங்குகள் பயிர் செய்யப்படுகின்றன.

சாதாரணமாக ஒரு ஏக்கராவுக்கு 120புஷல் தான் கிடைக்கும். ஆனால் இம்முறைப்படி பயிர் செய்வதில் ஒரு ஏக்காவுக்கு 2,500புஷல் கிடைக்கிறது

இந்நாட்டிலோ என்ருல் மக்களின் அறிவை கற்காலத்திற்கும் லோகங்கள் காலத்திற்கும் இழுத்துச் செல்லப் படுகிறது.

சம்பத் சுலோசன திருமணம்

தோழர்கள் E. V. K. சம்பத்துக்கும் தோழர் ஜி. சாமி நாயுடு அவர்களின் புதல்வி தோழியர் சுலோசனவுக்கும் 15-9-46 காலை 9-மணிக்கு திருப்பத்தூர் மீனுக்ஷி தியேட்டர் என்னும் கொட்டகையில், முன்னுள் அமைச்சர் தோழர் S. முத்தைய முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. மாகாணம்போல் மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 5000மக்கள் கூடியிருந்தார்கள். ஜில்லா பதிவாளர் (ரிஜிஸ்டிரார்) சட்டப்படி திருமணத்தைப் பதிவு செ[illegible] [illegible] திருமணம் நிகழ்ச்சி முடிவுற்ற[illegible] மக்களைப் பாராட்டித் தோழ[illegible] டி. ஷண்முகம், அன்பழகன், பெரியார், C. N. அண்ணுத்துரை, தங்கவேலர், முதலியவர்கள் பேசிஞர்கள். வந்திருந்த சுமார் 200க்கு அதிகமான தந்தித் தபால்கள் வாசிக்கப்பட்டன. சுவார் 10 வரவேற்புத்தாள்கள் படித்துத் தரப்பட்டன. மணமகன் தோழர் E V. K. சம்பத் தமது நன்றியைத் தெரிவித்தார்.

பின்னர் மணமக்கள் கொட்டகையிலிருந்து மேள வாத்தியங்களுடன் அவர்கள் இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சலகண்டாபுரம் பகுத்தறிவு நடிகர் கழகத்தாரால்

தலைவர் **பெரியார்**

தளபதி **அண்ணுத்துரை**

கவியரசர் **பாரதிதாசன்**

ஆகியோர் முன்னிலையில் நடத்தப்பட்டு, மூவரின் பாராட்டையும் பெற்ற முதன்மையான நாடகம்; பழங்கால இனப்போரைக் குறித்த பகுத்தறிவுச் சித்திரம் சுவையுள்ள பேச்சும் பாட்டும் நிறைந்த கருத்தோவியம்.

வீரவாலி

(ஆக்கியோன் : ப. கண்ணன்)

அழகிய புத்தகமாக அச்சாகிக்கொண்டிருக்கிறது.

விரைவில் கிடைக்கும்.

விவரங்கள் :—குயில் நிலையம்,

581, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.